இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 06 திகதி: 15.04.2018 விலை : 20.00

"மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்"

புனிதத்துவத்தில் வாழ்வதற்கான திருத்தூது அறிவுரை ஏடு திருத்தந்தையால் வெளியீடு

21ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ வாழ்விற்கான வழிகாட்டி

இன்றைய உலகில் புனிதத் துவத்திற்கான அழைப்பு குறித்து GAUDETE ET EXSULTATE என்ற தலைப்பிலான திருத்தூது அறிவுரை ஏட்டினை வெளியிட் டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் புனிதத்துவத்தில் வாழ உதவும் வழிகள் விவிலியத்திலேயே உள் ளன என குறிப்பிட்டுள்ளார்.

'மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்' என்று இயேசு விடுக்கும் அழைப்பு அவருக்காக அவமானப்படுத்தப்பட்டு துன் பங்களை அனுபவிக்கும் மக்க ளுக்காக விடுக்கப்பட்டுள்ளது என தன் ஏட்டின் தொடக்கத்தில் கூறியுள்ள திருத்தந்தை, இன் றைய உலகில் புனிதத்துவத் திற்கான அழைப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என் பது குறித்த பரிந்துரையே இத் திருத்தூது அறிவுரையின் முக் கிய நோக்கம் எனதெரிவித் துள்ளார்.

"புனிதத்துவத்திற்கான அழைப்பு" என்று தலைப்பிடப் பட்டுள்ள முதல் பிரிவில், நம் மோடு உடன் நடந்து நமக்கு ஊக்கமூட்டிவரும் புனிதர்கள், நம் அருகாமையில் வாழும் புனிதர்கள் ஆகியோரைக் குறித்து கூறியுள்ள திருத்தந்தை நாமும் உயிரூட்டம் உடைய வர்களாக, மனிதாபிமானம்மிக்க வர்களாக வாழ்ந்து புனித் துவத்தில் நுழைய இறைவன் அழைப்பு விடுக்கிறார் எனக் கூறியுள்ளார்.

இரண்டாவது பிரி வில் புனிதத்துவத்தின் எதிர் சக்தி கள் எவை என்பதை பட்டியலிட் டுள்ள திருத்தந்தை கடவுள் நம்பிக்கையின்மை, தாழ்ச்சி மனப்பான்மை இல்லாமை ஆகியவை குறித்து எடுத்துரைத் துள்ளார். இயேசுவின் ஒளியில் புனிதத்துவத்தைக் கண்டு கொள்ள வேண்டும் என அழைப்புவிடுக்கும் மூன்றாவது பிரிவு இயேசுவின் மலைப் பொழிவை முன்வைத்து கிறிஸ் தவ மதிப்பீடுகள் குறித்து விவ ரிக்கிறது.

திருத்தூது அறிவுரையின் நான்காம் பிரிவு இன்றைய உலகில் புனிதத்துவத்தின் அறி குறிகள் குறித்து விவரிக்கிறது.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு

புதிய துணை ஆயராக பேரருட்கலாநிதி ஜே.ஏ.அன்ரனி ஜயக்கொடி நியமனம்

கொழும்பு உயர்மறை மாவட்டத்திற்கு புதிய துணை ஆயராக பேரருட்கலாநிதி ஜயக்கொடி ஆராச்சிகே தொம் அன்ரனி ஜயக்கொடி அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர் கள் நியமித்துள்ளார் என சித்திரை மாதம் 4ம் திகதி இலங்கையிலுள்ள வத்திக்கான் தூதரகம் அறிவித்துள்ளது.

அருட்தந்தை அன்ரனி ஜயக்கொடி அவர்கள் 1958ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ம் திகதி கொழும்புமறைமாவட்டத்தைச் சேர்ந்த பமுனுகம என்னும் இடத்தில் பிறந்தவர். இவர் தனது கல்வியை (1964-1974) பமுனுகம புனித யோசப் பாட சாலையிலும், கொன்சால்வேஸ் பாடசாலையிலும் மேலும் கொழும்பு புனித அலோசியஸ் சிறிய குருமடத்திலும் (1975) மேற்கொண்டார்.

1978ம் ஆண்டு, அம்பிட்டிய தேசிய குருமடத்தில் இணைந்த இவர் மெய்யியல், இறையியல் துறைகளில் கற்கை நெறியை முடித்துக் கொண்டு 1985ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி கொழும்பில் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார்.

களுத்துறை இடை நிலை குருமடத்தில் தனது குருத்துவ பணியை ஆரம்பித்த இவர், பங்குத்தந்தையாக வேவல, பன்னிப்பிட்டிய, ஹல்பே, வெலி விட்ட ஆகிய பங்குத்தளங்களில் பணியாற்றியுள்ளார்.

பின்னர் உரோமையிலுள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத் தில்.. (தொடர்ச்சி 12ம் பக்கம்)

யாழ் மாநகர சபை மேயராக இ.ஆர்னோல்ட் தெரிவு

யாழ்ப்பாண மாநகரசபையின் மேயராக பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சேர்ந்த இம்மானுவேல் ஆர்னோல்ட் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினராக பணியாற்றிய இவர், சமூக சேவைகள் மற்றும் மதப் பணிக களில் ஆர்வமுடன் ஈடுபட்டு வரும் மனிதநேயம் மிக்க மக்கள் பணியாளராவார். இவரது பணி சிறக்க பாதுகாவலன் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இறையாசீரையும் வேண்டி நிற்கின்றோம்.

சென். பெனடிக்ற் வித்தியாலயத்தில் புதிய கட்டடத்தொகுதி திறப்புவிழா

யாழ் நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயத்திற்கான புதிய கட்டடத் தொகுதி கடந்த 09.04.2018 அன்று திறந்து வைக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் அருட்சகோ தரி எம். அஞ்சலிக்கா AC அவர்க ளின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய கட்டடத் தொகுதியை யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆசீர்வதிக்க, வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் மாண வர்கள் பயன்பாட்டிற்கு கையளித தார்.

புதிய இக்கட்டடத் தொகுதியில் 09 வகுப் பறைகள், ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான நவீன நூலகம், திறன் வகுப்பறை மற்றும் ஆரம்ப விஞ்ஞான மூலை என்பன அமைந்துள்ளன.

இந்நிகழ்வில் வட மாகாண கட்டடத் திணைக் களப் பணிப்பாளர்கள், பொறியிய லாளர்கள், மற்றும் பெற்றோர், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

வித்தியாலயத்தின் வளர்ச் சிக்கு அரும்பணியாற்றிய முன் னாள் அதிபர்களான அருட் சகோ தரி தேவநேசம், அருட்சகோ தரி ஞானதர்சினி ஆகியோரும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆலயத்தில் முதற்தடவையாக திருப்பலி

அருட்பணி அ.அல்வின் கிருபாகரன் அடிகளார் தனது முதற் திருப்பலியை இராணு வக் கட்டுப்பாட்டில் உள்ள பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் 15.04.2018 இன்று காலை 9.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கவுள்ளார் அடிக ளார் தனது குழந்தைப் பரு வத்திலேயே அவ்வூரைவிட்டு இடம்பெயர்ந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

ஞாயிறு மறைக்கல்வியை கட்டாயமாக்கும் முயற்சி

இலங்கையில் 6 முதல் 19 வயது வரையுள்ள அனைத்து மதங்களின் மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் அவரவர் மதங்கள் சார்ந்த கல்வி வகுப்பை கட்டாயமாக்கும் பரிந்துரை அமைச்சரவையின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றது.

பௌத்தர், கத்தோலிக்கர், இந்துக்கள் மற்றும் ஏனைய மதங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவரவர் மதங்களின் கல்வி ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் கல்விப்பாடங்கள் சார்ந்த போதனைகள் நடத்தப்படுவதற்கு எதிர்ப்புகள் எழுந்ததைத் தொடர்ந்து 2017ம் ஆண்டில் இலங்கை கத்தோலிக்க கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், புத்தமதத் தலைவர்களும் இப்பரிந்துரையை அரசிடம் தெரிவித்தனர்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் தனியார் கல்வி நிலைய வகுப்புகள் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தடை செய்யப்பட வேண்டும் எனவும் இதனால் மறைக்கல்வி வகுப்புகளுக்கு இடையூறு ஏற்படாது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

எமது எண்ணம்

பச்சைக்கொடி பகற்கனவாகிடுமா...?

இலங்கை அரசியல் வரலாற்றில் அண்மைக் காலமாக பெரும் பரபரப்புடன் பேசப்பட்டு வந்த தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரம் கூடு பிடித்து நிறைவில் தலைமை அமைச்சருக்கு வெற்றியைக் கொடுத்து ஓய்ந்துள்ளது.

தலைமை அமைச்சருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட இந்நம்பிக்கையில்லாப் பிரேரணை முதன் முறையாக நாட்டின் எதிர்க்கட்சி அல்லாத தரப்புகளால் கொண்டுவரப்பட்டமை வரலாற்றில் பதிவாகியுள்ளதுடன் உலக ஜனநாயக ஒழுங்கு முறைமையிலும் முதலாவதாக நடந்தேறிய சம்பவமாகவே அரசியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை அரசு இத்தகைய பல புதிர்களை முள்ளி வாய்க்காலுக்கு முன்னும் முள்ளிவாய்க்காலுக்குப் பின்னும் அவிழ்த்து வந்த நிலையில் இந்த விடயத்தை ஓர் அதிசயமாகப் பார்ப்பதில் அர்த்தம் ஏதும் இல்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 76 வாக்குகளும் எதிராக 122 வாக்குகளும் கிடைக்கப்பெற்று 46 மேலதிக வாக்குகளால் அது தோல்வி கண்டது. நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதில் சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் காட்டிய தீவிர அக்கறையும் ஆதரவுமே அதன் தோல்விக்குக் காரணம் என்பது நிதர்சனமாகும்.

அண்மைக் காலங்களாக இலங்கை அரசியலில் இறுதித் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் சிறுபான்மை இனத்தவர் கையில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் இதற்கு தக்க சான்றாகும். எப்படி இருப்பினும் சிறுபான்மை இனத்தவருக்கு விடிவு கிடையாது.

சிறுபான்மை இனத்தவரும் அவர்களைப் பிரதி நிதித்துவப் படுத்தும் கட்சிகளும் தலைமை அமைச்சருக்கு ஆதரவளித்தமை உள்ளங்கை நெல்லிக்கனியாகும். அதனை யாரும் வெளிச்சம் போட்டுக்காட்டவேண்டிய அவசியமில்லை. ஆனால், பிரதமரிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பேரம் பேசி நின்றுதான் அவர்கள் பச்சைக்கொடி காட்டினர்.

நில விடுவிப்பு, மீள் குடியேற்றம், அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், போரிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் போன்ற வற்றில் துரித முன்னேற்றமும், நல்லெண்ண சமிக்ஞைகளும் காட்டி நிற்கும் நல்லாட்சி கூட்டரசாங்கத்தைக் கவிழ்த்தால் அது ஒட்டுமொத்த தமிழினத்தின் நலன்களையே பாதிக்கும் என்பதால் தான் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தாம் எதிர்க்கவுள்ளதாக தமிழ்க் கட்சிகள் தெரிவித்து, செயற்படுத்தியும் விட்டனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு தலைமை அமைச்சர் வெற்றி பெற்ற நிலையில் தமிழர் தம் கோரிக்கைகளும் நிலைப்பாடுகளும் வெற்றி பெறுமா என்பதே இன்று அனைவர் மத்தியிலும் எழுந்துள்ள வினாவாகும்.

கடந்த பொதுத் தேர்தலில் பெரும்பான்மைக் கட்சிகளின் கொள்கைகளுக்கு சார்பாக குரல் கொடுத்து தமிழ் மக்கள் தமது கட்சிகளின் வழிகாட்டலில் தமது பெறுமதியான வாக்குகளை அவர்களுக்கு வழங்கினர். ஆனால் ஆட்சிப்பீடம் ஏறியவுடன் பெரும்பான்மைக் கட்சிகள் அவற்றையெல்லாம் உதாசீனம், செய்து ஆமை வேகத்தில் தமிழர்களின் பிரச்சினைகளை நகர்த்த முயற்சிக்கின்றனர். உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் இத்தகைய போக்கே நிலவி நின்றது.

தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ்த் தலைமைகளும் இதய சுத்தியுடனும், உண்மையுடனும், பொறுப்புணர்வுடனும் நடந்துகொள்ளவேண்டிய காலமிது. எதிர் எதிர் கட்சிகள் இணைவதும் ஒன்றுக்கொன்று ஆதரவளிப்பதும் ஆபத்தானது என பல தரப்புக்களிலிருந்து விமர்சனங்கள் எழுந்தாலும் மக்களின் நலனில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமாயின் இத்தகைய மாற்றங்கள் கால மாற்றத்துக்கு ஏற்ப நடைபெற்றுத் தான் ஆக வேண்டும் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இட மிருக்காது. அதற்காக தமிழர் நலன்களை பேரம் வைத்து வாகைசூடும் பெரும்பான்மை அரசியல் விவகாரங்களில் அத்தகைய கோரிக்கைகள் நிதானமாகவும் நீதியுடனும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர் பார்ப்பாகும்.

கேப்பாப்புலவு, இரணைதீவு நில விடுவிப்பு நீட்சியுற்றே செல்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் எனக் கூறினால் நாம் அவர்களை மீட்டுத் தருகிறோம் என அரசு தலைவர் உட்பட அமைச்சர்கள் ஈறாக உயிரூட்டமான ஒரு விடயத்தை நகைச்சுவையாகக் கூறி தட்டிக்கழித்து வருகின்றனர்.

சுதாகரனின் விடுதலை இழப்பின் பின்னணியில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நோக்கப்பட்டு வருகின்றது. ஏனைய அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக தொடர்ந்தும் மௌனமே நிலவுகின்றது. புதிய அரசியல் வரைபும் வெள்ளைவானில் காணாமல் போகுமா என அஞ்சத் தோன்றுகிறது. நல்லாட்சி அரசாங்கத்தை நம்பி அவர்களால் தான் எமக்கு விமோசனம் கிடைக்கும் என பச்சைக்கொடி காட்டும் தமிழ்த் தலைமைகளின் கனவு நனவாகுமா என்பதை காலம்தான் சொல்லவேண்டும்.

அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்

நிலைமாறும் உலகில் நிறைவுள்ளவருக்கு எம் அர்ப்பணம்

உலக இறையழைத்தல் தினத்துக்கான யாழ் மறைமாவட்ட இயக்குநரின் செய்தி

அருட்பணி எஸ்.ஜே.சி.பாஸ்கரன்

சித்திரை மாதம் 22 ம் நாள் நல்லாயன் தினமாகும். இந்நாளை அனைத்துலக திரு அவை உலக இறையழைத்தல் நாளாக பிரகடனம் செய்துள்ளது.

"அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு"என அங்கலாய்த்த கிறிஸ்து இயேசு இறைபணியாளர்களை அனுப் பும்படி இறைவனிடம் வேண்டு தல் செய்ய பணிக்கின்றார்.

இறையழைத்தல் சிறப் பாக குருத்துவ, துறவற அழைத் தல் நம் மத்தியிலிருந்து ஊற் றெடுக்க வேண்டும். இன்று வேரறுந்த மரங்களிலே விளைந் திருக்கும் மலர்களைப்போல் மக் களின் வாழ்வு பரிதாபத்திற்குரிய தும், பயங்கரமானதுமாக காட்சி அளிக்கின்றது. ஒவ்வொரு துறை களுக்குள்ளும் ஆன்மீகம் வரட்சி கண்டதே இதற்கு முதன்மைக் காரணமாகும். ஆன்மீகத்தில் ஏற்பட்ட வரட்சி நிலை மனித வாழ்வையே வரட்சி நிலைக்குத் தள்ளியுள்ளது. இதனை எவரும் மறுக்க முடியாது.

இத்தகைய இடர்மிகு நிலையிலிருந்து மக்களைக் காப் பாற்ற ஆன்மீகப் பாதையில் இறை பிரசன்னத்தில் சமூகத்தை ஆற்றுப்படுத்த குருக்கள், துறவிக ளின் இருப்பு அதிகம் அதிகமாக பல்கிப் பெருகிட வேண்டும். அதன்படி ஆன்மீகப் பணி, மனித நேயப் பணி, சமூக நலப்பணி என அனைத்துப் பக்கங்க ளிலும் பணி வாழ்வு கட்டியெழுப் பப்பட வேண்டும்.

இன்றைய சமூகத்தில் மனிதரை நல்வழிப்படுத்துகின் றோம் எனக் கூறிக்கொண்டு வேலியே பயிரை மேயும் அவ லங்களே தொடர்வதைக் காண முடிகின்றது. இதில் நாம் விழிப் புடன் இருக்க வேண்டும். "ஆட்டு மந்தைக்குள் வாசல் வழியாகப் பிரவேசிப்பவனே நல்லாயன் வேறு வழிகளால் பிரவேசிப்பவன் கள்வனும், கொள்ளைக் காரனு மாய் இருக்கிறான்" என இயேசு கூறியது இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

நெறிபிறழ்ந்து, நிலை குலைந்து தவிக்கும் எம் சமூ கத்தை, தடம்மாறிப் பயணிக்கும் எம் சமூகத்தை நன்னெறிப்படுத்த நல்லாயர்களை மேய்ப்பர்களை இறைவன் எமக்குத் தந்தருள இறைவனிடம் வேண்டுவதுடன், எமது குடும்பங்களை இறை அழைத்தலுக்கு செவிமடுக்கும் குடும்பங்களாக மாற்றியமைப் போம்.

இறையழைத்தலுக்காக செபிப்பதுடனும், பணம் கொடுப்ப துடனும் மட்டும் நின்றுவிடாது எமது குடும்பங்களிலிருந்தும் குருக்கள், துறவிகள் திரு அவை நந்தவனத்தில் நறும ணம் கமழும் மலர்களாக மலர்ந் திட அர்ப்பணம் செய்வோம்.

மன்னிப்பதில் சோர்வுறாத இறைவனுக்கு கதவுகளைத் திறந்து வையுங்கள்

மன்னிப்பதில் சோர்வுறாத இறைவனின் இரக்கத்தை நாம் அடைய வேண்டுமெனில் அவருக்காக நம் கதவுகள் எப்போதும் திறந்தே யிருக்கவேண்டும் என இறை இரக்கத்தின் ஞாயிறையொட்டி உரோம் நகர் புனித பேதுரு வளா கத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

நம் பாவங்களுக்காக மனம் வருந்தி வெட்கமுறுவது நல்லது, ஆனால் நாம் எது குறித்தும் அவமான உணர்வைக் கொள்ளாமல் இருப்பது பெரும் துன்பம் என தன் மறையுரையில் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசுவைக் கண்டதால் விசுவாசம் கொண்ட புனித தோமா- வைப் பற்றி கூறும் ஞாயிறு வாசகத்தை சுட்டிக்காட்டி நாமும் இயேசுவின் காயங்கள் வழியாக அவரைக் கண்டுகொள்ளவேண்டும் என்றார்.

தன்னை மறுதலித்தவரையும், தன்னை விட்டுவிட்டு ஓடியவர்களையும் இயேசு மன்னித்த தைக் காணும் நாம் மன்னிப்பின் முக்கியத்து வத்தை உணர்வோம் என்ற அழைப்பையும் முன் வைத்தார்.

கிறிஸ்தவர்கள் என்பது குறித்து நாம் பெருமைப்பட்டு நம் விசுவாசத்தின் உன்னத மதிப்பீடுகள் குறித்து எடுத்துரைத்தாலும் அவரின் சீடர்கள் போன்று இயேசுவைக் கண்டு அவரின் அன்பைத் தொடும்போதுதான் அமைதியையும் மகிழ்வையும் கண்டுகொள்வோம் எனவும் இயேசு வின் அன்பை நாம் கண்டு கொள்ளவேண்டுமெனில் முதலில் நம் பாவங்கள் மன்னிக்கப்பட நம்மையே நாம் திறந்தவர்களாக செயல்படவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நம் பாவங்கள் குறித்து நாம் வெட்கப்படுவதே முதல் படியாகும் எனவும் ஆனால் இன்றைய உலகில் எது குறித்தும் வெட்கப்படாத ஒரு நிலையே பெரும் தீமையாக உள்ளது எனவும் மேலும் தெரிவித்தார்.

இரக்கத்தின் மறைப் பணியாளரின் பணி மதிப்புமிக்கது

இரக்கத்தின் மறைப் பணியாளர்கள் திரு அவைக்கு மிகவும் தேவைப்படும் பணியை ஆற்றுகின்றனர் என இரக்கத் தின் யூபிலி ஆண்டில் உலகெங் கும் அனுப்பி வைக்கப்பட்ட இரக்கத்தின் மறைப்பணியாளர் களுக்கென புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்ட ஏறத்தாழ 550 அருள்பணியாளர்களை, வத்திக் கானின் ரெஜியா அறையில் சந்தித்து உரையாற்றிய திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டு அவர்களை ஊக்கப் படுத்தி பாராட்டினார்.

இரக்கத்தின் மறைப் பணியாளர்கள், யூபிலி ஆண்டில் மறைப்பணியாற்றுவதற்கென நியமிக்கப்பட்டாலும் அந்த ஆண் டில் இடம்பெற்ற ஏராளமான மனமாற்றங்களின் சாட்சியங் களை அறிந்த பின்னர் அப்பணி யாளர்களைத் தொடர்ந்து அப் பணியில் ஈடுபட வைக்கும் எண் ணம் வந்தது என்றும் திருத் தந்தை கூறினார்.

கிறிஸ்தவப் பாதை, கற்களின் மீது தடுமாற்றம் அடை யச் செய்யும் மற்றும் வாழைப் பழத்தோலில் சறுக்கி விழச் செய்யும் கடினமான பாதை என்று எச்சரித்த திருத்தந்தை, இரக்கத்தின் பணியாளர்க ளாக வாழ அழைக்கப்பட்டுள்ள வர்களின் வாழ்வு மேலும் சிறப் படையவும், அவர்களிடம் ஒப் படைக்கப்பட்ட பணிக்கு ஆதர வாக சிந்தனைகளை வழங் குவதாக கூறினார்.

தம் மன்னிப்பு மற்றும் இரக்கத்தின் செய்தியை உல குக்கு எடுத்துச் செல்லும் மக்கள் கடவுளுக்குத் தேவைப்படுகின்ற னர் எனவும், இயேசு தாம் உயிர்த்த நாளின் மாலையில் திருத்தூதர்களுக்கு இப்பணி யையே அளித்தார் எனவும் உரைத்த திருத்தந்தை, இரக்கத் திற்கு ஒத்துழைப்பாளர்களாக இருப்பது நாம் முதலில் பெற் றுள்ள இரக்கத்தின் அன்பை வாழ்வதாகும் என்று கூறினார். மேலும், இரக்கத்தின் மறைப் பணியாளர்களுக்கு சில நடை முறை ஆலோசனைகளையும் வழங்கிய திருத்தந்தை ஒருவர் தன் பாவங்களுக்காக மனம் வருந்தி ஒப்புரவு அருளடை யாளத்தைப் பெற வரும்போது கடவுளின் அருள் ஏற்கனவே அவரில் வேலை செய்கின்றது என்பதை நினைவில் இருத்த வேண்டும் என்றும் கூறினார்.

முதலில் கடவுள் செயற் படுகிறார். இரண்டாவதாக அருட் பணியாளரின் பணி செயற்படு கின்றது என்றுரைத்த திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரக்கத்தின் மறைப்பணியாளர் கள் வாழ்வின் ஊற்றாகிய கடவுளோடு ஒன்றித்து வாழ வேண்டுமென்றும், இந்த அனு பவத்திற்குச் சாட்சி பகர வேண்டு மென்றும், பாரபட்சமின்றி எல் லோரையும் ஏற்கவேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார்.

இதயமில்லா உலகில் இதயமாக

“இதயமில்லா உலகின் இதயமே சமயம்” என்றார் கார்ல் மார்க்ஸ். அவரது கூற்றை அப்படியே உண்மை என அறிவுறுதியாக நாம் ஏற்க இயலாது. இருப்பினும், “சமயம் மனிதரை வாழவைக்க உதவாது. கடவுளை வாழ்த்திக் கொண்டிருக்கும்போது, அவர்களது இவ்வுலக வாழ்வில் இழிநிலையைப் போக்கவும் அநீதிகளை எதிர்க்கவும் ஆற்றல் தராது அவற்றை அவர்கள் பொறுமையுடன் ஏற்று வாழ்ந்தால் செத்தபின் அவர்களுக்குச் சொர்க்கத்தில் பேரின்பம் கிடைக்கும் எனும் வகையில் சமயம் போதிக்கவும் செயல்படவும் செய்யும்போது அது இதயம் இற்றுப் போன, மனித நேயம் வற்றிப் போன சமூகத்தின் வெளிப்பாடும் பிரதிபலிப்புமே” என்பதே அவரது விமர்சனம். அன்று, ஏன் இன்றுகூட, பல வகைகளிலும் வேளைகளிலும் சமயங்கள் அவ்வாறுதான் பெரிதும் செயற்பட்டு வருகின்றன என்பதையும் நாம் மறுக்க இயலாது.

கார்ல்மார்க்ஸ் விமர்சித்தது உலக சமயங்கள் எல்லாவற்றையுமே. இருப்பினும் உடனடியாக அவர் கண் முன் தென்பட்டது 19 ஆம் நூற்றாண்டுக் கிறிஸ்தவம்தான். அதன் அன்றைய செயற்பாடு அவரது வருணனைக்கு ஏற்றதாகவே பெரிதும் அமைந்திருந் தது. உலகில் வேறு எந்த சமயத்தையும் விட அதிகமாக அன்றும் கிறிஸ்தவம் ஏழைகளுக்கு உதவுவது, நோயாளிகளைக் கவனிப்பது, அனாதைகளையும் கைவிடப்பட்டோரையும் ஆதரிப்பது எனும் பணிகளைச் செய்து கொண்டிருந்தது என்பது வரலாற்று மெய்ம்மை. இருப்பினும் அன்று வறுமைக்கும் நோய்களுக்கும் பலர் அனாதைகளாகவும் கைவிடப்பட்டவர்களாகவும் இருப்பதற்கும் முக்கிய காரணிகளாக இருந்த அன்றைய ஐரோப்பிய கொடுங்கோல் மன்னராட்சிகள், கட்டுப்பாடற்ற முதலாளியம் என்பவற்றின் கோர முகங்களை அது கண்டு கொள்ளாமலேயே இருந்தது! இல்லை, கண்டும் காணாததுபோல் நடந்து கொண்டது.

மேற்கூறப்பட்ட கொடுமைகளை எதிர்த்து ஆங்காங்கே சில ஆயர்களும், அருட்பணியாளர்களும், பொதுநிலையினரும், குழுக்களும் குரல்கொடுக்கவும் போராடவும் முனைந்ததை எவரும் மறுக்க இயலாது. இருப்பினும் திருத்தந்தை 13ஆம் லியோ புதிய மெய்ம்மைகள் எனும் சுற்றுமடல் வழியாகத் தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல் எழும்பும்வரை அத்தகைய குரல்களும் முயற்சிகளும் அரிதாகவே இருந்தன. அதன் பின்புகூட மிகப் பெரும்பான்மையான கிறிஸ்தவ அருட்பணியார்களும், துறவியரும், பொதுநிலையினரும் சமூக உணர்வும் ஈடுபாடும் அதிகம் இன்றி வழிபாடு, பக்தி முயற்சிகள், மன்றாட்டு, அருள்சிந்தனை என்பவற்றை மட்டுமே ஆன்மீகச் செயற்பாடுகளாகக் கருதிக்கொண்டு, அவற்றின் வழி தங்கள் ஆன்மாக்களைக் காத்துக் கொள்ள முயன்றனர்.

சமய மாயையா? சொகுசு ஆன்மீகமா?

மேற்கூறிய பல்வேறு வகைகளில் இதயமற்றதாகியுள்ள சமூகச் சூழமைவில் சமயங்களின் பணி என்ன? இறைவனது அன்பையும் இரக்கத்தையும் அனுபவப்படுத்தி மனித நேயத்தையும் சகோதரத்துவத்தையும் சமநீதியையும் மக்களுடைய உள்ளங்களிலும் உறவுகளிலும் சமூகச் செயற்பாடுகளிலும் வளர்த்துவிடுவதே அவற்றின் பணி. ஆனால், அவற்றின் பெரும்பான்மையான செயற்பாடுகளைப் பார்க்கும்போது அவையும் இதயமில்லாதவையாக மாறிக் கொண்டிருக்கின்றனவோ என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், அவை கோடி கோடியாகக் கொட்டி வானுயர்ந்த கோபுரங்களையும் குவிமாடங்களையும் கொண்ட பெரிய கோயில்களைக் கட்டுதல், ஏழைகள் என்றுகூட வேறுபாடு காட்டாது எல்லாரிடமும் கட்டாய நன்கொடை பிரித்து ஆடம்பர விழாக்கள் வழிபாடுகள் கொண்டாடுதல் என்பவற்றை வாடிக்கையாக நடத்திக்கொண்டிருக்கின்றன. அதுபோல் தெய்வங்கள், புனிதர்களின் திருவுருவங்களுக்கு பல்லாயிரம் செலவில் தங்க நகைகள் அணிவிப்பதும் அவர்களை மாட்சிப்படுத்தும் செயல்களாகவே கருதப்படுகின்றன. ஏழையாய் மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, எளியவராய் வறியவரின் தோழமையில் வாழ்ந்து, இறுதியில் ஆடையின்றி சிலுவையில் இறந்த இயேசுவைப் பின்பற்றும் கிறிஸ்தவமும்கூட பல வேளைகளில் இதே பாணியில் செயற்படுவதுதான் வேதனையும் வியப்பும் தரும் மெய்ம்மை. இவையெல்லாம் உண்மையிலேயே இறைவனின் மாட்சிக்காகவா அல்லது சமயத் தலைவர்கள் அல்லது மக்களின் அல்லது ஊர் தற்பெருமைக்காகவா எனும் கேள்வியும் நாம் எழுப்பவேண்டியதே.

இவையெல்லாம் போதாது என்றாற் போல் ஏழை மக்களுக்குத் தங்களையே அர்ப்பணித் துள்ளதாகக் கூறும் அருட்பணியாளர்களும் துறவியரும் அலங்கார வர வேற்புகள், வண்ண வளைவுகள், போலிப் புகழுரைகள், நட்சத்திர உணவு விடுதிப் பாணியில் அறுசுவை விருந்துகள் என்பவற்றுடன் யூபிலிகள் கொண்டாடுவது இன்றைய சமயக் கலாசாரம் ஆகியுள்ளது. மேலும், வாழ்வளிக்கும் இறைவனின் அனுபவம் பெற்று இவ்வுலக வாழ்வுப் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் மனிதநேய உணர்வுகள், உறவுகள், சமூக ஈடுபாடுகள் என்பவற்றை வளர்க்கவும் ஆற்றல் அளிக்கவேண்டும். வாழ்வைத் தொடாத வரையில் அதாவது, உள்ளங்களையும் உறவுகளையும் ஈடுபாடுகளையும் பரிவிரக்கம் உள்ளவையாக மாற்றும் வரையில் இத்தகைய பக்திச் செயற்பாடு

அருட்பணி
மா.றேஜிஸ் இராசநாயகம்

களெல்லாம் வெறும் சொகுசு ஆன்மீகமே.

இந்நிலையில் ஏழைகளுக்குக் கல்வி, அனாதைகளுக்கு ஆதரவு, நோயாளர்களுக்கு மருத்துவ உதவி, நலிந்தோருக்குச் சமூக சேவைகள் எனும் சமயங்களின் பல்வேறு பணிகள் கூட இன்று மிகவும் நலிந்தும் மெலிந்தும் போய்க் கொண்டிருப்பதும் நாம் பரவலாகக் காணும் மெய்ம்மை.

பரிவிரக்கத்தின் பசுஞ்சோலையாக

முதலில் திரு அவை இதய மில்லா உலகில் தன்னையே பரிவிரக்கத்தின் பசுஞ்சோலையாக மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்குக் கிறிஸ்தவர்கள் முதலில் இறை இரக்கத்தின் கதவுகளுக்குள் நுழைந்து அதை ஆழ அனுபவிக்க வேண்டும். யூபிலிக் கதவுகள் திறக்கப்பட கோயில்களுக்குத் திருப்பயணம் செய்து அக்கதவுகளுக்குள் நுழைவதை திருத்தந்தை அதற்கு உருவகமாகவும் உதவியாகவும் காட்டுகிறார். மேலும், வாழ்வை மாற்றும் வகையில் இரக்கத்தின் இறைவார்த்தைகளைக் கேட்பது, அன்றாடமும் சிறப்பாகத் தவக்காலத் தியானம் வழியாகவும் அது பற்றி அமைதியாக அருள் சிந்தனை செய்வது, இரக்கமுள்ள மனிதர்களாக நாம் வாழ அருளும் ஆற்றலும் கேட்டு மன்றாடுவது, திருவழிப்பாட்டையும்சிறப்பாக ஒப்புரவு அருளடையாளத்தையும்உண்மையிலேயே இறை இரக்கத்தின் அனுபவக் கொண்டாட்டமாக நிகழ்த்துவது, அவசரப்பட்டும் அநீதியாகவும் பிறருக்குத் தீர்ப்பு வழங்குவதைத் தவிர்ப்பது, தவறு செய்கின்றவர், குற்றவாளிகள் மீதும் தனிப்பட்ட பரிவு காட்டுவது என்பன இறை இரக்க சமூகமாகத் திரு அவை திகழத் திருத்தந்தை முன்வைக்கும் சில பரிந்துரைகள்.

மேலும் தம் புற ஈடுபாடுகளிலும் திரு அவை எத்தகைய பரிவிரக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனத் திருத்தந்தை பட்டியல் இட்டே காட்டுகிறார். அவை **“பசித்தோருக்கு உணவளிப்பது, தாகமுற்றோருக்குக் குடிக்கத் தருவது, ஆடையற்றோரை உடுத்துவது, அந்நியரை வரவேற்பது, நோயாளரை நலமாக்குவது, சிறையிலிருப்போரை சந்திப்பது, இறந்தோரை நல்லடக்கம் செய்வது”** எனும் உடல்சார் அன்பிரக்கப் பணிகளுடன் உள்ளம் சார் நற்செயல்களாகிய **“குழப்பத்திலிருப்போர்க்கு வழிகாட்டுவது, அறியாதவருக்கு அறிவு புகட்டுவது, பாவிகளை மனம்மாற அழைப்பது, துன்புறுவோருக்கு ஆறுதல் தருவது, குற்றங்களை மன்னிப்பது, தீங்கு செய்வோரைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வது, வாழ்வோருக்காகவும் இறந்தோருக்காகவும் மன்றாடுவது”** என்பனவும் ஆகும்.

இறுதியாக

நமது ஈழத்துச் சூழமைவில் அதன் சமூக ஈடுபாடும் இன்றியமையாதது. இதயமற்ற சமூக - பொருளாதார - அரசியல் - பண்பாட்டு அமைப்புக்களையும் ஆதிக்கங்களையும் அது எதிர்த்தாக வேண்டும் அவையற்ற நலமான சமூகத்தை உருவாக்க அது தன் பங்களிப்பைச் செய்ய வேண்டும். ஏனெனில், இதயமற்ற சமூக - பொருளாதார - அரசியல் - பண்பாட்டு - சமய அமைப்புகளே இதயமற்ற மனிதர்களையும் பெரிதும் உருவாக்குகின்றன. இறை இரக்கத்தின் திருமுகம் எனும் தன் மடலில் அதுபற்றி திருத்தந்தை அதிகம் எடுத்துரைக்கவில்லையெனினும் ஊழலைப் பற்றிப்பேசும்போது அதை நாம் துணிச்சலுடன் விட்டொழிப்பதுடன் “வெளிப்படையாகப் போரிட்டு வெல்ல வேண்டிய கடமையையும் எடுத்துக் கூறுகிறார்.

உண்மையாம் இயேசு கிறிஸ்து

“ஆதியிலே வார்த்தை இருந்தது. அவ்வார்த்தை கடவுளோடும் இருந்தது அவ்வார்த்தை கடவுளாயும் இருந்தார்” (யோவான் 1:1-2).

“வார்த்தை மனிதனனார். நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அவர் அருளும், உண்மையும் நிறைந்து விளங்கினார்”(யோவான் 1:1-2). இயேசு ஒரே சந்தர்ப்பத்தில் இறைவனாகவும், மனிதனாகவும் இருக்கின்றார் என்பதையே இயேசு மனிதனாதல் நிகழ்ச்சி குறித்து நிற்கின்றது. இறையியல்பிலும், மனிதவியல்பிலும் இணைந்தவராக இயேசு தன்னை வெளிப்படுத்துகின்றார். இறை வெளிப்பாட்டின் உச்சக்கட்டமாய் இயேசு மனிதனாதல் நிகழ்ச்சி அமைகின்றது.

பற்பலமுறையிலும் பல்வேறு வகையிலும் முற்காலத்தில் இறைவாக்கினர் வாயிலாக தம் முன்னோருடன் பேசிய இறைவன் நாம் வாழும் இவ் இறுதி நாட்களில் நம்மிடம் தம் மகனின் வாயிலாக பேசியுள்ளார் (எபிரேயர் 1:1).

இயேசு சாதாரணமுறையில் தமது உணர்வுகளையும் உள்ளக்கிடக்கைகளையும் வெளிப்படுவதை இலாசரை உயிர்ப்பித்த நிகழ்வில் அவதானிக்கலாம். மரியாள் அழுவதையும், அவரோடு வந்த யூதர்கள் அழுவதையும் இயேசு கண்டபொழுது மனங்குமுறி “அவனை எங்கு வைத்தீர்கள்?” என்று கேட்க “ஆண்டவரே வந்து பாரும்” என்றார்கள். அப்பொழுது இயேசு கண்ணீர் விட்டார். அதைக்கண்ட யூதர்கள் “அவன் மேல் இவருக்கு இவ்வளவு நேசம் பாருங்கள்” என்றனர் (யோவான் 11:33-36).

அருட்பணி வின்சன்ட் பற்றிக் (அமதி)

‘இதோ மனிதன்’ (யோவான் 19:5) என்ற பிலாத்துவின் பேச்சும் சிலுவை மரத்திலே மரணிக்கும் வேளையில் ‘தாகமாயிருக்கின்றேன்’ (யோவான் 19:28) என்ற இயேசுவின் குரலொலியும், உயிர்த்தெழுந்த பின்னர் ‘ராபூணி’ (யோவான் 20:14) என இயேசுவும் மதலேன்மரியாளும் உரையாடுதலும் ‘யோவானின் மகனான சீமோனே இவர்களை விட நீ என்னை அதிகமாய் அன்பு செய்கின்றாயா?’ (யோவான் 21:15) என பேதுருவிடம் கேட்டலும் இயேசுவின் மனித இயல்புக்கு மெருகூட்டுகின்றன.

இயேசு இறைவல்லமை மிக்கவர் என்ற உண்மை யூதபடையினரால் இயேசு பிடிபடும் நிகழ்ச்சியில் எதிரொலிக்கின்றது. இயேசு முன் சென்று “யாரைத் தேடி வந்தீர்கள்?” என்று அவர்களை கேட்டார். அவர்கள் ‘நசரேத்தூர் இயேசுவை’ என்று சொல்ல இயேசு ‘நான்தான்’ என்றார். ‘நான்தான்’ என்று அவர் சொன்னதும், அவர்கள் பின்வாங்கித்தரையில் விழுந்தார்கள் (யோவான் 18:4-6). இது இறைவன் முன்னால் மனிதர்கள் தம்மையே மறந்து தாழ்பணியவேண்டிய அவசியத்தை உணர்த்தி நிற்கிறது. மேலும் தோமஸ் அப்போஸ்தலரின் “என் ஆண்டவரே! என் தேவனே!” அறைகூவல் உயிர்தெழுந்த இயேசுவின் அருட்பிரசன்னத்தில் கிறிஸ்தவனின் பொருத்தமான பதிலைப் பிரதிபலிக்கின்றது.

இயேசுவின் ஆளுமை, போதனை, சாதனை அனைத்தும் இறை அரசை பிரசன்னப்படுத்துகின்றது. இயேசுவின் போதனைப்பகுதியில் மலைப்பொழிவும் விண்ணரசு பற்றிய உவமைகளும் இறையாட்சி மதிப்பீடுகளை முதன்மைப்படுத்துகின்றன. எளிய மனம், துயரம், சாந்த குணம், நீதி, இரக்கம், தூயஉள்ளம், சமாதானம், நீதிக்காய் துன்புறுதல் ஆகியன மத்தேயு நற்செய்தியின்படி (மத்தே 5) ஒரு கிறிஸ்தவன் நல்ல கிறிஸ்தவனாய் வாழ்வாழ்வதற்கான பண்புளை காட்டுவனவாய் அமைகின்றன.

இயேசு, கிறிஸ்து என அழைக்கப்படுகின்றார்: அவர் இறை மகனாக, மெசியாவாக விளங்குகின்றார். கிறிஸ்துவின் வாழ்க்கை இறைவாக்கினரின் வாழ்க்கையைப்போல் அல்லாது சிறப்பு மிக்க ஒன்றாக அமைகின்றது. இறைவாக்கினர் பணிக்காக வந்தவர்கள். ஆனால் இயேசுவின் வாழ்க்கையோ பணியாகிறது.

இறைதந்தையின் வடிவமாக வார்த்தையான இயேசு விளங்குதல் நித்தியத்திற்கும் வாழுகின்ற தந்தையோடு தொடர்புபடுத்தப்பட்ட நிலையில் இறைவனை வெளிப்படுத்துகின்றார் என்பதேயாகும். இவ் வெளிபடுத்தல் வெறும் சுயநோக்கு நிகழ்ச்சியல்ல, மாறாக மனிதர் மத்தியில் கிறிஸ்து மேற்கொள்ளும் பயணமாகும்.

முடிவில்லா வாழ்வு எனபது இயேசுகிறிஸ்து எனும் ஆளையே குறித்து நிற்கிறது. சீடர்களால் தேடப்பட்டு, காணப்பட்டு, அனுபவிக்கப்பட்டு வந்த இயேசுவே நற்செய்தியின் பொருளாகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவைத் தனது வாழ்வாகக் கொள்ள “வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்” (கலா 2:20) என்று புனித பவுல் கூறிய மனப்பான்மையில் இயங்கவேண்டியவனாகின்றான்.

இயேசுவை அறிந்து, அன்புசெய்து, அனுபவித்து வாழ்வோர் அவனியில் அமைதியை அனுபவித்து அகமகிழ்வர்.

திரு.தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு முல்லைத் தீவு, இணைப்பாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 16 வருடங்கள் அதிபராக பணிபுரிந்தவர். 32 வருடங்கள் மாத்தளன் கிராமத்திலும் 48 வருடங்கள் இரணைப்பாலைக் கிராமத்திலும் வாழ்ந்த இவர் 37 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக தலைமையாசிரியராக, அதிபராகப் பணிபுரிந்து தற்போது ஓய்வுபெற்று அரியாலையில் வசித்து வருகின்றார்.

கல்விப் பணியில் உயரிய சாதனைகள் படைத்து, நன் மாணாக்கர்களை ஈன்று புறந்தந்த இக் கல்வியியலாளன் கல்விப் பணியுடன் கத்தோலிக்க மறை பணியிலும் ஈடுபட்டார். கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் உப தலைவராகப் பணி புரிந்து பல சமூக நலத் திட்டங்களில் உழைத்து வந்தவர். யாழ் திருச்சபைக்கு தனது மகனாகிய அருட்பணி தொ.யேசுதாசன் (சந்திரன்) அடிகளாரை குருவாக உவந்தளித்த திருக்குடும்ப மாக இவரது குடும்பம் திகழ்கிறது. இவர் இளவயது முதல் இன்றுவரை பாதுகாவலன் பத்திரிகையை தொடர்ச்சியாக வாசித்து வருகின்றமை மகிழ்வுக்குரியதும், வியப்புக்குரியது மாகும்.

91 வயதிலும் பாதுகாவலன் பத்திரிகையை ஆர்வத்துடன் படிக்கும் ஓய்வு நிலை அதிபருடன் ஒரு சில நிமிடங்கள்...

ஓய்வு நிலை அதிபர் தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு அவர்களுடனான நேர்காணல்

தங்களின் நீண்டகால கல்விப் பணியில் தங்கள் மனதிற்கு நிறை வளிக்கும் விடயமாக எதைக் கருதுகின்றீர்கள்?

என் கல்விப் பணியானது அறிவும், ஆளுமையும் மிக்க நற்பண் புள்ள பல மனிதர்களைப் பல்வேறு துறை களிலே உருவாக்கி இச்சமூகத்திற்குக் கொடுத்திருப்பதே எனக்கு மிகுந்த நிறை வளிக்கும் விடயமாகவுள்ளது.

அன்றைய கல்வி நிலைக்கும் இன் றைய கல்வி நிலைக்கும் இடையில் காணப்படும் வேறுபாடு பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் தங் கள் கருத்து யாது?

அன்றைய கல்வியானது மாண வர்களுக்குக் கல்வியறிவை மட்டுமன்றி மனித விழுமியங்களையும், பண்பாட்டை யும் சேர்த்து விதைக்கும் ஒரு முறையாக விருந்தது. காலத்தின் தேவைக்கேற்ப இன்றைய கல்வி முறையில் அறிவியல் ரீதியில் பிரமாண்டமான வளர்ச்சி ஏற்பட் டுள்ளது. ஆயினும் அது சிறந்த அறிவா ளர்களை மட்டும் உருவாக்குகிறதே தவிர அவர்களைச் சமூக நலன் கொண்ட மனிதர்களாக உருவாக்கத் தவறிவிட்டது. இதற்கு பரீட்சையை மட்டும் மையப்படுத் திய மனப்பாங்கே காரணம்.

பாதுகாவலன் பத்திரிகையை தாங் கள் வாசிக்கத் தொடங்கிய காலத்தை யும் அதனை வாசிக்கத் தொடங்கிய காரணியையும் குறிப்பிட முடியுமா?

1972 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 91 வயதிலும் இப்பத்திரி கையை வாசிக்கின்றேன். நான் ஓர் கத்தோலிக்க ஆசிரியராக 1950 தொடக் கம் 1986 வரை பணிபுரிந்தேன். ஆன்மீக வாழ்வைத் தெரிந்து கொள்ள இப் பத்திரிகை பேருதவியாக அமைந்தமையே இதனை நான் வாசிப்பதற்குக் காரண மாய் அமைந்தது.

பாதுகாவலன் பத்திரிகையில் வெளி வந்த , வெளிவந்து கொண்டிருக்கும் ஆக்கங்களுள் தங்களைப் பெரிதும் கவரும் ஆக்கங்கள் அல்லது எழுத் துக்கள் பற்றிக் கூறமுடியுமா?

ஒவ்வொரு ஆக்கமும் ஏதோ வொரு வகையில் என்னைக் கவருவ தாக, எனக்கு ஒரு செய்தியைக் கூறுவதாக விருப்பதால் குறிப்பிட்டு ஒரு ஆக்கத்தின் பெயரைக் கூற முடியவில்லை. இருப்பி னும் சிறுவர் அல்லது இளையோரின் ஆக்கமெனில், அதில் எனக்குத் தனி அபி மானமுண்டு. குறிப்பாக ஆசிரியர் தலை யங்கத்தை தவறாது விரும்பிப் படிப்பதுண்டு.

பாதுகாவலன் பத்திரிகையின் வளர்ச் சிப்போக்கு பற்றி தாங்கள் கொண்டி ருக்கும் அபிப்பிராயம் யாது?

இயேசுவின் நற்செய்திப்பணியை இல்லங்களுக்குக் கொண்டு செல்லும் ஒரு அழகிய கருவியாகத்தான் இப்பத்தி ரிகை அமலமரித்தியாகிகளால் ஆரம்பிக்கப் பட்டது. அக்காலம் தொடக்கம் இன்றுவரை அது படிப்படியாகப் புதிய பல பரிமாணங்க ளில் ஆக்கபூர்வமான முறையில் வளர்ச்சி யடைந்து கொண்டே வருகின்றதென்பது கண்கூடு.

பாதுகாவலன் பத்திரிகையில் மேலும் சிறப்படைய விரிவாக்கம் பெற தாங்கள் முன்வைக்கும் ஆலோசனை கள் யாவை?

இயேசுவின் தாயையும் இறை மகன் இயேசுவையும் பாதுகாக்கும் புனித பணியை இறையுதவியுடன் செவ்வனே செய்து முடித்த தூய வளனாரின் பெயர் கொண்ட இப்பத்திரிகை, தனது முதற்பணி யான நற்செய்திப்பணியை அவ்வாறே சிறப்புடன் கொண்டு செல்வதிலேயே என்றும் முழுக்கருத்தாய் இருக்க வேண் டும். இதற்கு

- திரு அவையின் பல்வேறு நிலை யினரிடமிருந்து பெற்ற இறையனுபவங் கள் பகிரப்பட வேண்டும். அது இப்பத்திரி கையை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இறை நம்பிக்கை வளர சக்தியாக அமையும்.
- திருப்பலியினதும், திருவருட் சாதனங்களினதும் சிறப்பு, அவற்றில் இடம்பெறும் சடங்குகளின் அர்த்தம், அவற்றில் தகுதியான முறையில் பங் கெடுக்க வேண்டியதன் அவசியம், அதற் கான வழிகள் போன்றவற்றை உள்ளடக் கிய தெளிவான, விரிவான ஆக்கங்கள் இலகுதமிழில் வெளிவர வேண்டும்.
- இன்றை காலகட்டத்திற்கேற்ற வகையில் இளந்தலைமுறையினருக்கு வழிகாட்டும் விதமாக மனித மாண்பும், நல்லொழுக்க விழுமியங்களும் நிறைந்து மிளிர்கின்ற ஆக்கங்கள், மனதைத் தொடும் வகையில் வெளிவர வேண்டும். சித்திரம், சிறுகதை, குறும்கதை, கவிதை என இளையோரை சென்றடையக்கூடிய வடிவில் அவை உருவாக்கப்பட வேண் டும். இப் பத்திரிகை தன் பணியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல என் வாழ்த்துக்களும், ஆசீகளும்.

பாதுகாவலன் பத்திரிகை தொடர்பாக பல விடயங்களையும் ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் தந்து தவிய ஓய்வுநிலை அதிபர் தே. தொம்மையப்பு அவர்களுக்கு எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவிப் பதுடன், அவரும் அவரது குடும்பத்தினரும் நிறைவான இறையருளைப் பெற்றுவாழ பாதுகாவலன் செபத்துடன் வாழ்த்திநிற் கின்றது.

தொம்மையப்பு அதிபரால் உருவான ஓர் மாணவனின் (பொறியியல் கலாநிதி) மன ஓசை

உப்பிட்டோனை உள்ளளவும் நினை
உரமிட்டோனுக்கு எனது
90 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அதிபரின் கடமைக்கு அப்பாற்பட்டு
புதுக்குடியிருப்பு R.C
பாடசாலை செல்வதை
நிறுத்தியிருந்த என்னை
2-3 தடவை வழிமறித்து விசாரித்து
பாடசாலைக்கு அழைத்து
தவறவிட்ட பரீட்சைகளையும்
பெற்றுக்கொண்ட சித்திகளையும்
பொருட்படுத்தாது
வயதின் அடிப்படையில்
1984 இல் 9ம் வகுப்பில் சேர்த்துக்
கொண்டார் அதிபர் தொம்மையப்பு
அன்றைய நாட்களிலே
நான் பள்ளிக்கூடம் விட்டுட்டன்
என பிள்ளைகள் சொல்லிக்கொள்வதும்
பெரியோர் அதைக் கேட்பதும்
காண்பதும் சாதாரணம்
அதை அன்று அதிபர் தொம்மையப்பு
சாதாரணம் என்று எடுக்கவில்லை
பட்டுப்போயிருந்த எனது
படிப்புக்கு உரமிட்டார்
பெற்றோரும் குருவானவரும்
ஆசீர்வதிப்பதை விட
மேலான ஒரு ஆசீரைப்போன்று
ஆக்கபூர்வ ஊக்கத்தை எனக்களித்தார்

பல மாணவர்களும்
அவர்களது பெற்றோரும்
Engineer, Doctor பீடத்தை
நோக்கி இலக்குவைத்து
படித்திருந்தது வழமை
ஆனால் 1984 இல்
பொறியியலில் கலாநிதி என்பது
நான் அறிந்திருக்க முடியாத சொற்கள்
அறிந்திருந்தாலும் அது
Mission - Impossible தான்

இன்றைய நாட்களிலே
இப்படியான நினைவுகள்
என் மனதில் ஊசலாடும்போது
தொம்மையப்பு அதிபர் தான்
இதற்கு அத்திவாரக்கல்லாகத் தெரிகிறார்
அவரைத் தாண்டி
என்னால்
தோண்ட முடியவில்லை

பழைய மாணவன்
அன்ரன் அருள்ராஜா
பொறியியல் கலாநிதி

யார் யாரைத் தொடுவது?

வன்னி வாழ் இதயம்
ம.சூசைமுத்து

எம்மாவுஸ் ஊரில் இருந்து ஜெருசலேமிற்கு திரும்பிய சீடர்கள் ஏனைய சீடர்கள் தங்கிய இடத்திற்கு விரைந்து வந்தனர். அப்போது பேதுருவானவர் எம்பெருமான் இயேசு தமக்கு பேரன்புடன் காட்சி தந்த பெருமையை ஏனை யவர்களுக்கு விரிவாகக் கூறினார். அதேவேளை எம்மாவுஸ் சீடர்களும் தாங்கள் வழியிலே போய்க் கொண்டிருந்தபோது நிகழ்ந்தவற்றையும் தங்கியிருந்த இடத்தில் அப்பத்தைப்பிட்டு அவர் கொடுக்கும்போது தான் ஆண்டவர் எனக் கண்டு கொண்டோம்; உடனே மறைந்து விட்டார் எனவும் அங்கிருந்தவர்களுக்கு கூறினார்கள்.

அன்றைய மாலை நேரத்தில் திடீரென்று இயேசு அவர்கள் நடுவே வந்து நின்று "உங்களுக்கு சமாதானம் உண்டாகுக" என வாழ்த்தி நின்றார். அவர் களோ இது மாயையோ, மயக்கமோ ஆண்டவர் இயேசு தானோ என அஞ்சிக் கலங்கினர். இயேசு, "என் அன்பர் களே அஞ்சவேண்டாம். தந்தை என்னை எழுப்பி உள் ளார்" இது உண்மையெனக் கூறி அவர்களை தம் அருகில் அழைத்தார். அவர்கள் ஏதோ ஓர் ஆவியைக் காண்பதுபோல் அவரைப் பார்க்கவே ஏதாவது உண்ணக் கொடுங்கள் எனக் கேட்டார். அவ்வாறே அவர்கள் கொடுத்த தேனடையை உண்டு அவர்களுக்கு தம்மை எண்பித்துக் காட்டி னார். சற்றுநேரத்தில் உள்ளே வந்தது போல் மறைந்து விட்டார்.

மூன்று நாட்களாய் மனங்கசிந்திருந்து அன்றைய காலை முதல் குழப்பமுற்றிருந்த சீடர் கள் அப்பொழுதுதான் முதல் தடவையாக மகிழ்ச்சி யோடு உணவருந்தத் தொடங்கினார்கள். அவர்க ளின் ஆனந்தச் சிரிப்பின் எதிரொலி மூடியிருந்த கதவையும் தாண்டித் தெருவெங்கும் கேட்டது.

இவ்வாறு இயேசு காட்சி கொடுத்தவேளை யில் தோமா அப்போஸ்தலர் அங்கிருக்கவில்லை. இவர் பேதுருவைப்போல் ஓரளவு வேக மிக்கவர். உணர்ச்சி வசப்படுபவர். இயேசு இலாசரை உயிர்ப்பிற்கு முன் ஜெருசலேமிற்குப் போய் நாமும் அவரோடு சாவோம் எனத் துணிச்சலாடு சொன்ன தோமையார், இயேசு பிடிபட்டபோது விலாசம் தெரியாது ஓடிப்போனவர் ஒரு சில நாட்கள் நூல் அறுந்த பட்டமாக அலைந்து திரிந்த தோமா அன்று ஏனைய சீடர்களைத் தேடி அவர்கள் இருந்த இடம் வந்தார் துக்கம் கொண்டாடுவதற்கு.



ஆனால் அங்கு அவர்கள் கோலா கலமாக இருப்பதைப் பார்த்து முத லில் திடுக்கிட்டார். அவர்களோ ஆண்ட வர் உயிர்த்து விட்டார் எங்களுக் கெல்லாம் காட்சி தந்தார் என்று சொல்லி ஆனந்தம் கொண்டிருந்தனர்.

நடந்தது என்னவோ நான் நம்பமாட்டேன். மண்ணிலே பிறந்த வனே நீ மண்ணாய்ப் போவாய் என்று வேத நூலே சொல்கிறது. மாண்டவர் யாராவது மீண்டு வந்தி ருக்கிறாரா? இயேசு உயிர்த்திருந் தால் எனக்குமுன் தோன்றி காட்சி தரவேண்டும். நான் அவரைத் தொட்டுணர வேண்டும். இல்லையெனில் நம்பமாட்டேன் என பிடிவாதம் கொண்டார். எவரும் பேசவில்லை. இயேசு உயிர்த்த 08ம் நாள் மீண்டும் ஒரு ஞாயிறு திடீரென்று அவர்கள் முன் காட்சி தந்தார். தோமாவை நோக்கினார். தோமாவின் கல்லான இதயம் கரைந்துருக இயேசுவின் திருவடிகளில் கதறி விழுந்தார்.

யார் யாரைத் தொடுவது? இறைவனை மனிதனா? மனிதனை இறைவனா? இறைவனாலேயே மனிதனைத் தொட முடியும். இறைவன் நம்மைத் தொட விசுவாச வாழ்வில் வீறுடன் பயணிப்போம்...

காவலன் கலசம்

செயற்கைமுறை இனவிருத்தித் தொழில்நுட்பம்

ஓர் ஒழுக்க இறையியல் பார்வை

முகவுரை

இன்று தொழில்நுட்பம் மனித வாழ்வில் பெரும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டது. சகல துறைகளிலும் இன்று இயந்திரங்களே ஆட்சி நடத்துகின்றன. பொருட்களின் உற்பத்தியிலிருந்து ஆரம்பித்து, அவற்றை வாடிக்கையாளரிடம் கொண்டுசேர்ப்பது வரைக்கும் இயந்திரங்கள் இயங்க ஆரம்பித்துவிட்டன. இந்தத் தொழில் நுட்பமானது மருத்துவத்துறையிலும் பெரும் நன்மை பயப்பது வரவேற்கத் தக்கதோர் விடயம். இங்கே செயற்கை மறை இனவிருத்தித் தொழில் நுட்பமும் அவற்றின் பயன்பாடும் பற்றி ஒழுக்க இறையியல் கோணத்தில் சிந்திக்க உங்களை அழைக்கிறேன்.

1. மகப்பேறின்மை

மகப்பேறின்மை என்பது விபரிக்க முடியாததொரு பெரும் வலி. இந்த வலியை இன்று பல தம்பதியினர் வெளியில் சொல்ல முடியாமல் தமக்குள் வேதனை அனுபவிப்பது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயம். பொதுவாக மகப்பேறின்மை என்பது உடல் சார் பிரச்சினையாகவே பார்க்கப்படுகிறது. மேற்கத்தைய நாடுகளில் சில ஆய்வுகளின் படி, 6 தம்பதிகளுக்கு ஒன்று மகப்பேறின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மை. இன்று நாம் வாழும் சமூகங்களிலும் மகப்பேறின்மை என்பது முன்னைய காலங்களைவிட அதிகளவிலே காணப்படுகிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

மகப்பேறின்மை என்பது வெறுமனே உடல்சார் பிரச்சினை மாத்திரமல்ல. மாறாக உடல்சார், உளவியல்சார், சுற்றுச் சூழல்சார் காரணிகளும் இதனுடன் தொடர்புபட்டுள்ளன என்கிறது ஆய்வு. பொதுவாக திருமணமான ஆணும் பெண்ணும் கிட்டத்தட்ட ஒரு வருட கால எல்லைக்குள் பலமுறை தொடர்ச்சியான இயல்பான உடலுறவுகளின் பின்னர், அவர்களிடம் கரு உருவாக்கத்தில் ஏற்படும் ஓர் தோல்வியை மகப்பேறின்மை என்று கருதுவர்.இத் தோல்வி தற்காலிகமானதாகவோ அல்லது நிலையான தோல்வியாகவோ இருக்கலாம். நிலையான தோல்வியினை மலட்டுத் தன்மை (Steritity) என்றும் தற்காலிக மானதை மகப்பேறின்மை (Infertitity) என்றும் அழைப்பர்.

1.1. ஆண் மகப்பேறின்மை
(Male Infertility)

சுமாராக 15 -20 வீதமான ஆண்களுக்கு இப்பிரச்சினை வருவதுண்டு. சாதாரணமாக திருமணமான ஒரு ஆணின் விந்தினை மருத்துவப் பரிசோதனை செய்வதன் மூலம் இப்பிரச்சினையை அடையாளம் காண முடியும். ஓமோன் சுரப்பி (Hormonal Causes), தொற்று வியாதிகள் (Infections), பிற்கோக்கு விந்து தள்ளுதல் (Retrograde ejaculation), சதைக் கட்டிகள் (Tumours), விந்து செல்லும் நாளத்தில் குறைபாடு (Sperm duct defects), பாலியல் செயல் பிறழ்ச்சி (Sexual dysfunction) நாளத்தில் ஏற்படும் வீக்கம் (Varicocele), சில மருத்துவக் காரணிகள் (Certain Medications) போன்றவை ஆண்களின் மகப்பேறின்மைக்குக் காரணங்களாகும். இவற்றோடு சில சமயங்களில் மரபணுப் பிரச்சினை, சுற்றுச் சூழலின் பாதிப்பு போன்றவையும் காரணங்களாக அமைந்து விடுகின்றன.

1.2 பெண் மகப்பேறின்மை
(Female Intertility)

பெண் மகப்பேறின்மைக்கு பல்வேறு காரணங்கள் உண்டு. மேம்பட்ட தாய்மை வயது (Advanced Maternal Age), இனவிருத்தி உறுப்புக்களின் செயல் பிறழ்ச்சி (Dysfunction of reproductive Organs), மரபணுப் பிரச்சினைகள், நவீன வாழ்வியல் பழக்க வழங்கங்கள் (Modern lifestyle habits), சுற்றுச்சூழலின் பாதிப்புக்கள் போன்றவை பெண் மகப்பேறின்மைக்கான பிரதான காரணங்களாக அமைகின்றன. பொதுவாக பெண்களுக்கு 35 வயதுக்கு மேலே மகப்பேற்று இயல்பு குறைவடையத் தொடங்கிவிடும். எனவே 35 வயதின் பின் திருமண வாழ்வைத் தொடங்கும் பெண்களுக்கு மகப்பேறின்மைக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

2. செயற்கைமுறை இனவிருத்தித் தொழில்நுட்பங்கள்

இனவிருத்தித் தொழில்நுட்பம் என்பது ஒரு வகைச் சிகிச்சைமுறை. இது மகப்பேறின்மைக் குறைபாடு உள்ள தம் பதியினருக்கு மகப்பேற்றிற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இம் முறைமையில் இருவகைக் குழுமங்கள் உள்ளன. முதலாவது வகையானது செயற்கைமுறை கரு உருவாக்கலைக் (Artificial Fertilization) கொண்டுள்ளது.

இம்முறைமையில் செயற்கை முறை விதையூட்டல் (Artificial Insemination), கண்ணாடிக் குழாயினுள் கருத்தரித்தல் (In vitro Fertitization), ஆண் / பெண் புணரிகளை பலோப்பியன் குழாயினுள் கடத்துதல் பரிமாற்றுதல் (Gamete Intrafallopian transfer - GIFT), கருமுட்டையை பலோப்பியன் குழாயினுள் பரிமாற்றம் செய்தல் (Zygote Intrafallopian Transfer - ZIFT) என்பன உள்ளடங்கும். இரண்டாவது வகை தொழில்நுட்பக் குழுமம் முற்றிலும் வித்தியாசமானவை. அவை குளோனிங் (Cloning) அதாவது பிரதிகளை உருவாக்கல் செயற்கை முறை ஆண் புணரிகளை உருவாக்குதல், செயற்கை முறை கருப்பை (Ectogenesis) உருவாக்கல் போன்றவை உள்ளடங்கும்.

> **குழந்தைகள் ஒவ்வொன்றும் பெற்றோரின் அன்புறவில் விளைந்த கனிகளே. எனவே மகப்பேறு என்பது திருமண வாழ்வில் கணவன் -மனைவி இருவரினதும் அன்பால் ஏற்படும் பாலுறவின் பெறுபேறாக இருக்க வேண்டுமேயொழிய, தொழிநுட்பத்தினால் ஏற்படும் புறக்காரணிகளின் ஆதிக்கத்தால் விளைவிக்கப்படும் உற்பத்திப் பொருளாக மாறிவிடக் கூடாது. இறைவனே ஒரு மனிதனின் வடிவமைப்பாளன்.**

2.1 செயற்கைமுறை கருத்தரித்தல்
(Artificial Fertitization)

ஆண் - பெண் பாலுறவின்றி தொழில்நுட்பத்தின் உதவியுடன் மனித கருகை உருவாக்கும் படிமுறையே செயற்கைமுறை கருத்தரித்தலாகும். (வேறு விலாங்குகளின் உயிரினையும் இவ்வாறு கருத்தரிக்க முடியும்) இச்செயல் முறையானது பல்வேறு வழிகளில் நடைபெறகின்றது.

2.1.1. செயற்கைமுறை விதையூட்டல்
(Artificial Insemination)

சிறிய நெகிழ்ச்சித்தன்மை கொண்ட குழாயின் உதவியுடன் ஓர் ஆணின் விந்தானது பெண்ணின் இனப்பெருக்கப் பாதை வழியே செலுத்தப்பட்டு பெண்ணின் முட்டையுடன் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டு கருவூட்டல் செய்யப்படும் செயல்முறையே செயற்கைமுறை விதையூட்டல் எனப்படும் இது இருவகைப்படும். கோமோலோகஸ் (Homologous), கெ(H)ட்ரோலோகஸ் (Heterologous)

a) **கோ(H) மோலோகஸ்**

கணவன் - மனைவி பாலுறவில் கணவனின் விந்து வீரியமுடையதாக இருப்பினும், சில குறைபாடுகள் காரணமாக கணவனின் விந்து மனைவியின் முட்டையைச் சந்திக்கும் வாய்ப்பு இழக்கும் நிலையில் கணவனின் விந்து "சில வழிமுறைகளில்" சேமிக்கப்பட்டு பின்னர் மேற்குறிப்பிட்ட செயற்கைமுறை விதையூட்டல் மனைவியின் இனப்பெருக்கப் பாதையினூடு செய்யப்பட்டு கருத்தரிப்பு நிகழ்வை ஏற்படுத்துதல் கோமோலேகஸ் முறையாகும்.

b. **கெ(H)ட்ரோலோகஸ்**

மேற்குறிப்பிட்ட செயன்முறையில் கணவனின் விந்திற்குப் பதிலாக வேறு ஒரு கொடையாளியின் விந்து பயன்படுத்தப் படுமாயின், அது கெ(H)ட்ரோலோகஸ் முறை என அழைக்கப்படும்.

2.1.2. கண்ணாடிக்குழாயினுள் கருத்தரித்தல்
(In Vitro Fertilization - IVF)

தூண்டல் முறையில் பெறப்படும் முட்டையும், ஆணின் விந்தும், ஒரு சிறிய தட்டில் வைத்துக் கருவூட்டப்பட்டு பின்னர் அது அடைகாப்புக் கருவியினுள் (Incubator) வைக்கப்பட்டு கருவானது குறிப்பிட்ட நிலைக்கு வளர்ச்சியுற வைத்து பின்னர் பெண்ணின் கருப்பையினுள் தொழில்நுட்பக் கருவியின் உதவியுடன் வைக்கப்படும் செயன்முறை IVF என அழைக்கப்படும். இச் செயன்முறையையும் கோ(H) மோலோகஸ், கெ(H)ட்ரோலோகஸ் என இருவகைப்படுத்தலாம். IVF முறையானது ICSI, GIFT, FICI, PGD, PGS என மேலும் பலவகை முறைகளை அறிமுகம் செய்துள்ளது. மேலும் இதன் அறிமுகத்தில் ஒன்றே வாடகைத்தாய் (Surrogate Mother) முறை அதாவது வாடகைத்தாய் முறை யென்பது ஒப்பந்த அடிப்படையில் வேறு ஒரு பெண்ணின் கருப்பையை விலை கொடுத்து வாங்கி கருவைச் சுமந்து பின்னர் விலைகொடுத்து வாங்கி கருவைச் சுமந்து கையளிப்புச் செய்யும் ஒருவகை வியாபாரமாகும்.

3. ஒழுக்கவியல் பிரச்சினைகள்

இனவிருத்தித் தொழில்நுட்பத்தின் அறிமுகத்துடன் குழந்தை உருவாக்கல் (Baby Making) ஒரு சிறந்த வியாபார முறை மையாக உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நவீன மருத்துவம் மகப்பேறின் மையைப் போக்கி, குழந்தைச் செல்வத்தினைக் குடும்பங்களுக்கு வழங்க வழி அமைத்துக் கொடுப்பினும், மகப்பேற்றின் மாண்பினையும், கணவன் - மனைவி பாலுறவின் புனிதத் தன்மையையும் குடும்பம் என்கின்ற அமைப்பின் கட்டு மானத்தினையும் கேள்விக்குறியாக்கி விட்

அருட்பணி T.ரவிராஜ்

டுள்ளது என்பது மறுக்க முடியாத உண் மையே. மேலும் சமய நம்பிக்கைகளை யும், அறநெறிப் கோட்பாடுகளையும் அவமதிக்கும் தன்மை கொண்டதாகவும் இவை சில சந்தர்ப்பங்களில் அமைந்து விடுகின்றன.

மகப்பேறின்மையை போக்கி, தம்பதியினருக்கு மகிழ்ச்சியைக் கொடுக் கும் செயல் வரவேற்கத்தக்கதாக இருப்பி னும், இம்முயற்சியில் பயன்படுத்தப்படும் வழிகள் அல்லது படிமுறைகள் மட்டில் உள்ள அறநெறிகள் பற்றி நாம் சிந்திக்கத் தவறிவிடுகிறோம். குழந்தை பெறுவது திருமணமான தம்பதியினரது உரிமையென்றாலும், அதைப் பெற்றெடுப் பதற்கும் நேர்த்தியான வழிகளைக் கையா ளவேண்டியதும் இவர்களது கடமையல் லவா. அதாவது இலக்கு சரியாக இருப்பி னும், அதை அடையும் வழிகளும் நேர்த்தி யானவையாக இருக்க வேண்டும் என்பதே அறநெறி, பிழையான வழிகளில் சரியான இலக்கை அடைவதும் பிழையன்றோ.

தொழில்நட்பம் சமய, அறநெறி நம்பிக்கைகளுடன் உடன்பாடுடையதாக இருத்தல் மிகவும் அவசியம். அவ்வாறு இருக்கத்தவறும் பட்சத்தில் இனவிருத்தித் தொழில்நுட்பம் குடும்பம் என்னும் சமூ கத்தின் அடிப்படை அலகிற்கு பெரும் அச்சுறுத்தலாக மாறிவிடும்.

4.திருமறையின் படிப்பினை

திருச்சபையானவள் மகப்பேறின் றித் தவிக்கும் தம்பதியர் மட்டில் மிகுந்த இரக்கமும் அக்கறையும் கொண்டுள்ளது. அத்தோடு மருத்துவம் மகப்பேறின் மைக்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றை நீக்கி மகப்பேறிற்கு வழி அமைத்துக் கொடுக்கும் முயற்சியை மிகவும் பாராட்டுகிறது. ஆனால் இம் முயற்சிகளில் ஏதும் திருமண வாழ்வின் பாலுறவின் புனிதத்திற்கும், மகப்பேற்றின் மாண்பிற்கும், குடும்பத்தின் கட்டமைப்பிற்கும் குந்தகம் விழைவிக்கும் வாய்ப்பு இருப்பின் அவற்றை வன்மையாகக் கண்டிக்க திருமறை ஒருபோதும் தவறுவதுமில்லை.

உதாரணமாக IVF முறையில் வீரியமுள்ள ஒரு மனித முளைக்கருவை (embryo) உற்பத்தியாக்கும் படிமுறையில் பல மனித முறைக்குருக்கள் அழிக்கப்படுவதை மனித மாண்பினைச் சிதைக்கும் செயல் என்று திருமறை வலியுறுத்துகிறது. இவ்வாறு இனவிருத்தித் தொழில் நுட்பங்கள் மகப்பேறின்மையை நிவர்த்தி செய்யும் முயச்சிகள் அனைத்தையும் அற நெறிகளின்படி சரியானவை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், பல சந்தர்ப்பங்களில் மனித மனப்பரம்பலின் மாண்பினை சிதைக்கின்ற செயற்பாடுக ளாக மாறிவிடுகின்றன. பல சந்தர்ப்பங்க ளில் இனவிருத்தித் தொழில் நுட்பமானது திருமணத்தின் நோக்கங்களான அன்பு றவு, மகப்பேறு ஆகிய தம்மகத்தே அகப் பிணைப்புக் கொண்ட இவ்விரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்றைத் தனித்தனியே பிரித்து விடுகின்றன.

குழந்தைகள் ஒவ்வொன்றும் பெற்றோரின் அன்புறவில் விளைந்த கனிகளே. எனவே மகப்பேறு என்பது திருமண வாழ்வில் கணவன் -மனைவி இருவரினதும் அன்பால் ஏற்படும் பாலுறவின் பெறுபேறாக இருக்க வேண்டுமேயொழிய, தொழிநுட்பத்தினால் ஏற்படும் புறக்காரணிகளின் ஆதிக்கத்தால் விளைவிக்கப்படும் உற்பத்திப் பொருளாக மாறிவிடக் கூடாது. இறைவனே ஒரு மனிதனின் வடிவமைப்பாளன். ஆனால் இனவிருத்தித் தொழில்நுட்பத்தில் மருத்துவர்கள் மனித வடிவமைப் பாளர்களாக மாறிவிடுகிறார்கள்.

இந்நிலைபற்றி விரிவான விளங்கங்களை திருச்சபையின் படிப்பினைகளாக 'Humanae Vitae', Drgitas Persona', Evangelium Vitae', Donum Vitae' என்னும் மடல்களில் பார்க்கலாம். 'Donum Vitae' என்னும் மடலில் நாம் காண்கிறாம். ஒரு குழந்தை பிறக் கின்ற போது நாம் அக்குழந்தையின் அடிப்படை உரிமையான அதனது உருவாக்கல் ஆரம்ப நிலை முழுமையான, மனித இயல்பு கொண்ட மனித உறவின் செயற்பாடாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

முடிவுரை

திருச்சபை மனிதத்தின் காப்பாள னாகவும், அதில் வல்லுனராகவும் அன் பின் நாகரீகத்திற்கும், வாழ்வின் நாகரீகத் திற்கும் பணிபுரியும் நோக்குடன் மகப் பேறின்மையைப் போக்கும் மருத்துவத் தினை ஊக்குவிக்கிறது என்பது உண்மை. அதேவேளை அனைத்து செயற்கைமுறை இனவிருத்தி தொழில் நுட்பங்களையும் வாழ்வின் புனிதமான மாசுபடாத ஒழுக்க நெறிக் கோட்பாட்டின் வெளிச்சத்தில் சீர் தூக்கிப் பார்க்க அழைப்பு விடுக்கிறது. அத்தோடு பெற்றோரின் மகப்பேற்று உரிமையானது பிள்ளைகளின் உன்னத மான, மாண்புநிறை பிறப்பு உரிமையை ஒருபோதும் நிராகரிக்க கூடாது என்பதை யும் கூறிநிற்கிறது.

மேலும் மகப்பேறின்மை என் னும் பெரும் வலியை தம்பதியினர் பெற் றோரால் கைவிடப்பட்டு, பெற்றோரை இழந்து ஆதரவைத் தேடி நிற்கும் குழந்தை களைத் தத்து எடுத்து வளர்ப்பதன் மூலம் ஈடுசெய்ய முடியம் என்பதை திருச்சபை எப்போதும் ஆதரித்து வலியுறுத்துகிறது.

மறைவின் 10 ஆம் ஆண்டு நினைவில்...

மனிதநேயப் பணிகளில் தன்னை ஆகுதியாக்கிய கருணை மேகம்

எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார்

20.04.2008 அன்று மாங்குளம் - மல்லாவி வீதியிலே கிளைமோர் தாக்குதலினால் கொல்லப்பட்ட அருட்தந்தை எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் யாழ். மறைமாவட்டத்திலும் ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றிலும் ஆழமாக தடம் பதித்த ஒரு மாபெரும் மனிதராவார். மனிதாபிமான ஆளுமை கொண்ட ஒரு குருவாக, ஒரு தமிழ் மகனாக, ஒரு ஆசிரியனாக, ஒரு அரசியல்வாதியாக,ஒரு அறிவாளனாக, ஒப்பற்ற தலைமகனாக வாழ்ந்து சென்றுள்ளார் என்று சொல்வதிலும் பார்க்க அவர் போராடி மடிந்துள்ளார் என்று சொல்வதே மிக்க பொருத்தமானதாகும்.

அவரது போராட்டம் மண்ணுலகு சார்ந்த ஆயுதப் போராட்டமல்ல. மாறாக ஆட்சி புரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகத்தின் மீது ஆற்றலுடையோர், கால வெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடு (எபே.16:32) உண்மையை இடைக்கச்சையாக கட்டிக்கொண்டு, நீதியை மார்புக் கவசமாக அணிந்துநின்று, அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை தன் காலணியாகக் கொண்டு நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக்கொண்டு, மீட்பை தலைக் கவசமாகவும், கடவுளின் வார்த்தையை தூய ஆவி அருளும் போர் வாளாகவும் ஏந்திக்கொண்டு (எபே 12:55) போராடி விழுந்தார்.

எம் கருணை என்றும் கருணாரத்தினம் அடிகளார் என்றும், கிளி பாதர் என்றும், கிளி மாஸ்டர் என்றும் பலராலும் அழைக்கப்பட்டு வரும் இந்த மாபெரும் மனிதனின் சாவு யாழ் திருச்சபைக்கும், ஈழத் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பு என்பதை எவரும் மறக்கமுடியாது.

அருட்தந்தை கருணாரட்னம் அடிகளாரின் வாழ்வு இறை விசுவாசத்தில் கட்டப்பட்ட ஒன்றாகவே இருந்துள்ளது. தனது வாழ்வின் இருப்பும் அதன் இயக்கமும் இறைவனே என்று நம்பி வாழ்ந்தவர். “ஆண்டவரே என் ஆயன் எனக்கேதும் குறையில்லை” திபா.25:17 என்ற திருப்பாடலின் வரிகள் அவரது நாவில் அடிக்கடி அசைந்தாடும். தனது வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளிலும், நிகழ்வுகளிலும் இறை விருப்பத்தைக் கண்டறிந்து செயற்பட்ட குருவாக வாழ்ந்து வந்தார். அதிகாலை துயிலெழுந்து அனுதினமும் அவர் மேற்கொண்டு வந்த இறைபுகழ், இறைவார்த்தைத் தியானம், ஒப்கொடுத்த திருப்பலி யாவும் இறை திருவுளத்தை அறிந்து கொள்ளும் நேரமாகவும் இறைவனின் வல்லமையை பெற்றுக்கொள்ளும் நிகழ்வுகளாகவும் அவருக்கு அமைந்திருந்தன.

பத்து ஆண்டுகள் கடந்து சென்று விட்டன. ஆனால் அவரது நினைவுகள் என்றும் பசுமையானதாக, உயிர்த் துடிப்பு உள்ளவையாக, எம் நெஞ்சங்களை விட்டு அகலாதவையாக உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

“கிறிஸ்துவுக்குப் புகழ்” என்ற விசுவாசக் கலாசாரத்தை யாழ். மண்ணில் உருவாக்கிய தந்தை அவர். திருவிவிலியத்தின் திருப்பாடல்களுக்கு உயிர் கொடுத்த துறவி அவர். திருப்பாடல்கள் என்றால் பலருக்கு வேப்பங்காய் போலத் தோன்றும். ஆனால் அவை வேப்பங்காய்கள் அல்ல, ஆண்டவர் எவ்வளவு இனிமையானவர் என்பதைச் சுவைத்துப் பார்க்கும் சுவை நரம்புகள் என்பதைத் தாம் பணி செய்த பணித் தளங்களில் வாழ்ந்த மக்களின் மனங்களில் உசுப்பேற்றி விட்டவர். அவர் நிறைவேற்றும் வழிபாடுகள், அருட்சாதனக் கொண்டாட்டங்கள், இதர சமயச் சடங்குகள் யாவும் எப்பொழுதும் அனைவராலும் விரும்பப்பட்ட உயிரோட்டம் நிறைந்த “அய்யோ நிறைவடைந்து விட்டதே! இன்னும் கொஞ்ச நேரம் சொல்லக் கூடாதா” என்று ஏங்க வைக்கும் சக்தி கொண்டவையாக அமைந்திருந்தன.

அருட்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா

அவருடைய அறிவின் கூர்மையும், செயற்பாட்டின் வேகமும், பேச்சின் வலிமையும் திருச்சபையை மட்டுமல்ல அரசியல் வட்டாரங்களையும் அதிரவே செய்தது. அதனால் அந்த அதிர்வுகளைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்களுக்கு அவர் எதிரியாகத் தோன்றினார். பலரின் விமர்சனங்களுக்கு உள்ளானார். ஆனாலும் விமர்சனங்களுக்கும் தாக்குதல்களுக்கும் அவர் அஞ்சவில்லை. தான் நினைத்தது சரி எனப்பட்டால் அதனைச் செய்தே முடிப்பார்.

அவருடைய சமய செயற்பாடுகளாயினும் சரி, அல்லது அரசியல், சமூக செயற்பாடுகளாயினும் சரி, அனைத்திலும் இழையோடிக்கொண்டிருந்தது கிறிஸ்துவின் ஆன்மீகமே. ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாகவே நின்று அவர்களுக்காகவே உரத்துப் பேசி, உயிர் துறந்த இயேசுக் கிறிஸ்துவின் ஆன்மீகமே தந்தையின் வாழ்விலும் நிறைந்திருந்தது. அவர் இருக்கும் இடம் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். அவரைச் சூழ எப்போழுதும் பலர் இருந்துகொண்டே இருப்பார்கள். நகைச் சுவை நிறைந்த, செயற்பாட்டுத் திறன் கொண்ட தாராள மனப்பான்மை கொண்ட அவரது பேச்சும் வாழ்வும் அவரோடு பலரை எவ்வேளையிலும் இணைத்து வைத்துக்கொண்டேயிருந்தது. அவரோடு இருக்கும் நேரங்கள் எப்பொழுதும் பல பாடங்களைக் கற்றுக்கொள்ளும் நேரமாகவே இருக்கும்.

குருத்துவமே தமது வாழ்வின் அடைதற்கரிய உன்னத கொடையாக கொண்டு அவர் வாழ்ந்து சென்றுள்ளார். குருத்துவத்தின் மகிமையை எந்தச் சூழ் நிலையிலும் இழந்து விடத் தயாராக இருக்கவில்லை. அவருடைய பணித் தளங்கள் வேறுபட்டதாக இருந்தாலும் தான் ஒரு கத்தோலிக்க குரு என்பதை எல்லா இடத்திலும் நிலை நிறுத்தியே வந்தார். இவ்வாறான அவருடைய வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்குப் பாடமாக அமையட்டும். அவர் இறைவனின் பாதத்தில் புனிதர்களின் கூட்டத்தில் நிரந்தரமாய் மகிழ்ந்திருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

அருட்பணி செ.அன்புராசா (அமதி) அடிகளாரின் “வாழ்த்துடிக்கும் வடலிகள்” கவிதை நூல் கண்ணோட்டம்

இறைவனின் படைப்பின் சிகரம் மனிதன். மனிதனின் படைப்பின் சிகரம் மொழி. மொழியின் படைப்பின் சிகரம் கவிதை. கவிதைகள் மனிதனை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டும். தன்னையே தனக்குக் காட்டும் சக்தி மிக்கது.

தமிழ் இலக்கிய உலகில் பல் வேறு கவிதைகளைப் படைத்து தனக் கென தனித்துவமான முத்திரை பதித்துக் கொண்ட அருட்பணி செ.அன்புராசா அமதி அடிகளார் தற்போது தமிழில் குழந்தை இலக்கியப் பணியில் தன் திருப்பத்தை ஏற்படுத்தி அண்மைக்காலமாக சிறுவர்களின் வாழ்வு மலர ஆக்கபூர்வமான படைப்புகளை பிரசவித்து வருகின்றார்.

அந்த வகையில் அவரது மன எண்ணத்தில் சிந்தனைச் சிதறல்களாக தெறித்து கைவண்ணத்தில் உதயமாகும் **“வாழத் துடிக்கும் வடலிகள்”** கவிதை நூல் வெறுமனே கவிதைப் பதிவுகள் என்பதைக் கடந்து எமது தாயகத்தினதும் குறிப்பாக எமது எதிர்கால சந்ததியினதும் வரலாற்றுப் படிமமாக பளிச்சிடுகின்றது.

அருட்பணி செ.அன்புராசா அமதி அடிகள் இலக்கிய உலகில் பன்முக ஆளுமை படைத்த பெரும் படைப்பாளி. கலைப் பின்னணியையும் பாரம்பரியத்தையும் கொண்ட குடும்பத்தில் உதித்து, அமலமரித் தியாகிகள் சபையின் குருவாக துறவுப்பணி பூண்டாலும் தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் துறக்க முடியாது அவற்றினூடாக இறை பணியையும் இலக்கியப் பணியையும் ஆழமாக விதைத்து வருகின்றார்.

எமது வலிதோய்ந்த வரலாற்றை மாற்றியமைக்கக்கூடிய குழந்தைச் செல்வங்களை இக்கவிதை நூலுக்கு கருப் பொருளாகக் கொண்டு எமது எதிர்கால சந்ததியை ஆற்றல் மிக்கவர்களாக ஆளுமைப் பண்பு கொண்டவர்களாக, அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாக நடைபயில வைப்பதற்காக **“வாழத் துடிக்கும் வடலிகள்”** வெளிவந்துள்ளது.

“வாழத் துடிக்கும் வடலிகள்” கவிதை நூலில் பிரவேசம் கொண்டுள்ள 22 கவி தைகளும் சங்க இலக்கியங்களில் பாத்திரக் கூற்றுக்களாக அகத்தினைப் பாடல்கள் வெளிவந்தது போல சிறுவர்களின் கூற்றாகவே வெளிவந்திருப்பது போற்றத் தக்கது. உள்ளத்தை உருக வைத்த எமது பேரியல் வரலாற்றில் நெருப்பாற்றை நீந்திக் கடந்து வடுக்களை அதிகமாக சுமந்து நிற்பவர்கள் சிறுவர்களே என்பது வரலாற்றுப் பதிவாகும்.

போர் கொடுத்த வலிகளை விட, இன்று வேறும் பல வழிகளில் எமது சிறுவர்கள் வலிகண்டுதுடிக்கின்றனர். இதனைப்பாரா முகப்படுத்தினால் எதிர்காலம் சூனியமய மாகும். இதனை நன்குணர்ந்த அடிக ளார் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களை, கொடுமைகளை, அநீதிகளை மற்றொருவர் கூறாமல் சிறுவர்கள் ஊடா கவே சிறுவர்களே கூறுவதுபோல் தமது கவிதைப் படைப்பை ஆக்கியுள்ளதுடன் சிறுவர்களின் பசுமையான நினைவுகளை கனவுகளை அவர் தம் மொழிகளாலேயே சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார்.

மழலை சொல்வது அனைவர் மனங்கங்களையும் வருடும். அனைவர் மனங்களையும் சிந்தனைக்கு இடமாக்கும். பதச்சோறாக இக்கவிதைத் தொகுப்பிலிருந்து இரு சில கவிதை வரிகள்

ஒடி ஓடி ரியூசன் என்று
ஓய்வுறக்கம் ஏதுமின்றி – எம்மவர்
புலமைகாட்டும் போட்டியை
புரிந்துணர மாட்டீரோ

என கல்வித் திணிப்புக்கு எதிரான சிறுவர்களின் மனக்கசப்பும்,

எங்கள்
பெற்றோரை உற்றாரை இழந்து – இன்று
சிறுவர் இல்லமே எம் வீடு
வேண்டாம் மீண்டும் ஒரு பரணி –நீர்
புவியில் பாடட வேண்டாம்

என வலிசுமக்கும் அவர் தம் அவலமும்,

பொலித்தீன் பாவனையை
பொறுப்புடன் விலக்கிடுவோம்
பசுமைப் புரட்சிதனை
பாரினில் தொடங்கிடுவோம்

என அவர் தம் எதிர்காலக் கனவும் அவர்கள் **“வாழத் துடிக்கும் வடலிகள்”** என்பதை நிதர்சனமாக்கியுள்ளது.

நிஜத்தின் தேடலாகவும், நினைவின் வருடலாகவும், நிகழ்காலத்தின் ஊடலாக வும், நிலை வாழ்வின் நாடலாகவும், நீண்ட டொலிக்கும் அன்புராசா அடிகளாரின் **“வாழத் துடிக்கும் வடலிகள்”** நீள நினைந்து, நித்தமும் பின்பற்றத்தகும் அற்புத படைப் பாக பரிமாணம் பெறுகிறது. காலத்தைக் காட்டுவது மட்டுமல்ல, காலத்தை மாற்று வதும் உத்தம கவிஞனின் கடமையாகும்.

அன்புராசா அடிகளார் காலத் தைக் கருத்தில் எடுத்து ஞாலத்தை வென்ற இறைபணியாளனாக, இலக்கியப் படைப் பாளியாக, கவிஞனாக பன்முக ஆற்றல் பெற்று தமிழ் இலக்கிய செல்நெறியில் தமிழ் கூறும் நல்லுலகில் வலம் வர, பலம் தரும் இறையருளை வேண்டி வாழ்த்த நாம் யார்? வணங்குகிறோம்.

– இ.இ.வசீகரன் (ஆசிரியர்)

காவலன் கலசம்

காவலன் கண்மணிகள்

அன்பின் காவலன் கண்மணிகளே!

மன்னிப்பு

ஒரு தமிழ்த் திரைப்படத்தில் தமிழில் மன்னிப்பு என்ற வார்த்தை எனக்குப் பிடிக்காத வார்த்தை என்று திரும்பத் திரும்பக் கூறுகிறார். இது உலக சிந்தனை.

எந்த மொழியிலும் மன்னிப்பு என்கின்ற வார்த்தைதான் இயேசுவுக்கு மிகவும் பிடித்த மான வார்த்தை.

குற்றமற்ற தம்மை மிகப் பெரிய குற்ற வாளி என்று தீர்ப்பிட்டவர்கள், சாட்டையால் அடித்தவர்கள், முள்முடிசூட்டியவர்கள், முகத்தில் காறி உமிழ்ந்து எள்ளி நகையாடியவர்கள், பாரச்சிலுவையைச் சுமத்தி கூரிய ஆணிகளால் கை கால்களில் அறைந்தவர்கள் எல்லோரையும் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசு மன்னிக்கிறார். இது தெய்வ சிந்தனை. தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று தெரியவில்லை (லூக்.23:34) என்று கூறி மன்றாடினார்.

மரியாள் தன் மகனை சிலுவையில் அறைந்தவர்களைப் பார்த்து நீங்கள் உருப்படுவீர்களா என்று கதறவில்லை. கொடூர துன்பத்திற்கு யார் காரணம் என்று சினம் கொண்டு சீறிப்பாயவும் இல்லை, ஆய்வு செய்யவும் இல்லை, மாறாக அனைவரது பாவங்களையும் தன் திருமகனது இரத்தத்தால் கழுவப்படவேண்டும் என்று மன்றாடினார்.

சிலுவையடியில் நின்று கொண்டிருந்த மரியாள் (யோ 19:25) புதிய ஏவாளாக காட்சி அளிக்கிறார். மனித குலத்தின் முதல் பெண்ணான ஏவாள் தனது கீழ்ப்படியாமையினால் மரத்தடியில் நின்று பாவ நஞ்சைப்பாரினில் புகுத்தினாள். ஆனால் இரண்டாவது ஏவாளான மரியாள் (மாதா) சிலுவை மரத்தடியில் நின்று இறைவனின் திருவுளத்திற்கு முழுமையாக ஆகட்டும் என்று சொல்லி பாவநஞ்சை எடுத்து விட்டார். தம் மாசற்ற திருமகன் காயத்தழும்புகளால் உருமாறியதைக் கண்டதும் அத்தாயின் உள்ளம் நொருங்கியது. கைகால்களில் ஆணிகள் அடிக்கும்போது அவர் எழுப்பிய வேதனைக் குரலைக் கேட்ட மரியாள் பட்டவேதனை அளவிட முடியாது. "என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறும் போது அன்னை மரியாள் சிலுவை மரணத்தின் கசப்பைப் பார்த்து கண்ணீர் மழை பொழிந்தாள்.

இயேசுவின் செந்நீரும் மரியாளின் கண்ணீரும் கலக்கின்றன. நாமும் இறைவனின் மக்கள் என்ற வட்டத்திற்கு வரவேண்டும் என்றால் நமக்குத் தீமை செய்தவர்களை மன்னிக்க வேண்டும். உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள். சபிக்க வேண்டாம். (உரோ 12:14) பிறரை மன்னித்துவிடுங்கள். அவர்களது நன்மைக்காக மட்டுமல்ல உங்கள் நன்மையின் பொருட்டும் தான். இப்படிச் செய்யாவிட்டால் எரிச்சல் உங்களுக்குள் புகுந்து உங்களையே அழித்துவிடும். நெருப்பை வைத்து நெருப்பை அணைக்க முடியாது.

வன்முறையை வைத்து வன்முறையைச் தீர்க்கமுடியாது. மன்னியாமை நம்மை அழித்துவிடும். மன்னிப்பை வதைத்து மன்னிப்பைப் பெறுவோம்.

-மரியதாஸ் விக்ரோறியா
யாழ்ப்பாணம்.

பாவத்துக்கான பாவ மன்னிப்பு
செய்வோர் ஒரு வகை
பாவமன்னிப்பு இருப்பதால்
பாவம் செய்வோர் மறுவகை
இதில் நாம் எந்த வகை?

டாக்டர். போல் ஜோசெப்
ரொரன்டோ, கனடா

சிந்திக்க ஓர் சித்திரம்

பெற்றோருக்கு...

சிங்கப்பூரில் பாடசாலை அதிபர் ஒருவர்.பரீட்சை நாட்களை அண்மித்து தனது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோருக்கு எழுதியதாக கூறப்படும் கடிதம் ஒன்று சமூக வலைத்தளம் ஊடாக கிடைக்கப் பெற்றேன். ஆங்கிலத்தில் அமைந்திருந்த அக்கடிதத்தை அதன் பயன் கருதி இங்கே பதிவு செய்கிறேன்.

அன்பான பெற்றோரே!

விரைவில் உங்கள் பிள்ளைகளுக்கான பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன. அப்பரீட்சைகளில் உங்கள் பிள்ளைகள் சிறப்பாக தேற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் நீங்கள் இருப்பீர்கள் என்பதை நான் நன்கறிவேன்.

ஆயினும் பின்வரும் விடயங்களை கட்டாயம் நினைவில் கொள்ளுங்கள். பரீட்சை எழுதும் பிள்ளைகளில் சில ஓவியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கணிதத்தில் சிறப்பாக தேற வேண்டிய அவசியமில்லை. அவர்களுள் ஒரு சிறந்த தொழில் முனைவர் இருப்பார்கள் அவருக்கு இலக்கியம் பற்றியோ, வரலாறு பற்றியோ அதிகம் கரிசனை கொள்ளமாட்டார்கள். ஒரு விளையாட்டு வீரன் இருப்பார் அவருக்கு உடல் உறுதி தேவைப்படுவது போல் உயிரியல் அறிவு தேவைப்படாது.

உங்கள் பிள்ளைகள் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றால் மிகவும் மகிழ்ச்சி. ஆனால் அவர்கள் அவ்வாறு பெறவில்லையென்றால் அவர்களிடமிருந்து அவர்களது தன்னுறுதியையும் மாண்பையும் பறித்து விடாதீர்கள். இது ஒரு பரீட்சைதானே பரவாயில்லை என்று அவர்களிடம் சொல்லுங்கள். அவர்கள் பெரிய விடயங்களுக்காக படைக்கப்பட்டுள்ளார் எனக் கூறுங்கள். அவர்கள் எத்தனை புள்ளிகளை எடுத்தாலும் அவர்கள் உங்களது பிள்ளை. ஆகவே நீங்கள் அவர்களை அன்பு செய்கிறீர்கள். அவர்களைத் தீர்ப்பிட மாட்டீர்கள் எனக் கூறுங்கள்.

நீங்கள் இவ்வாறு செய்யுங்கள் அப்போது உங்கள் பிள்ளை இந்த உலகை வெல்லுவதைக் காண்பீர்கள். ஒரு பரீட்சையோ அல்லது குறைந்த புள்ளிகளோ அவர்களது கனவுகளையும் திறமைகளையும் அவர்களிடமிருந்து பறித்து விடாது. இறுதியாக தயவு செய்து வைத்தியர்களும், பொறியியலாளர்களும் தான் உலகில் மிக்க மகிழ்ச்சியானவர்கள் என ஒரு போதும் கருதாதீர்கள்.

பெற்றோருக்கு சமர்ப்பணம். மீண்டும் ஒரு முறை வாசியுங்கள்.

அன்புடன்

.....

அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்

ஆன்மீகம்

கடவுளுக்கு சேவை செய். கடவுளுக்கு அருகில் நீ செல்லலாம். பிறருக்கு சேவை செய். கடவுள் உனக்கு அருகில் வருவார்.

அகிம்சை

கண்பார்வை அற்றவன் குருடன் அல்ல, தன் குற்றங்களை உணராதவனே குருடன்.

அறிவியல்

இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பக்கத்தை இந்த உலகையே படிக்க வைப்பது உங்கள் கைகளில் தான் தங்கியுள்ளது.

முக்கியம்

படிப்பு முக்கியம் - என்பதைப்போல
பரீட்சை முக்கியம்
பரீட்சை முக்கியம் - என்பதைப்போல
புள்ளிகள் முக்கியம்

புள்ளிகள் முக்கியம் - அதைவிடப்
பிள்ளைகள் முக்கியம்
பிள்ளைகள் முக்கியம் - எம்போன்ற
பிள்ளைகள் முக்கியம்

அருட்பணி செ.அன்புராசா (அமதி)
"வாழ்த்துடிக்கும் வடலிகள்" கவிதை நூல்

இளையோர் காவியம் 04

நீ தூசிபடிந்த
உன் இலட்சியக் கண்ணாடியை துடை
திருப்புமுனை இல்லாத வாழ்க்கை
கொஞ்சநேரம் எரியும் அடுப்பு முனை

நீ எப்படியும் வாழலாம் என்று
திறந்து வைத்த பாதைகளை எல்லாம் மூடு
நான் இப்படித்தான் வாழவேண்டும் என்று
ஒரே ஒரு பாதை மட்டும் போடு

நீ குறுக்கு வழியில் போனால்
இன்பம் முன்னுக்கு துன்பம் பின்னுக்கு
நீ நேர்வழியில் போனால்
துன்பம் முன்னுக்கு இன்பம் பின்னுக்கு

சோகம் பயம் காமம்
இந்த மூன்றும் உனக்கு சிறை - உடை
எழாத வாழ்க்கை
முளைக்க முடியாமல் மடியும் விதை

ஏ-9 வீதி போல் அல்ல
ஆன்மீகத்துக்காக திறந்து வைக்கப்பட்ட பாதை
நீ போகமுடியாமல் திரும்ப நினைப்பாயே
அப்படித்தான் இருக்கும் நட

இளமை வரையறுக்கப்பட்டது
எனவே இளமை ஒரு பொருத்து வீடு
நீ அதற்குரிய காலம்
முடிவுக்கு முன் சாதனை வீட்டை போடு

நீ கனவுகள் காண்
அப்துல்கலாம் சொன்னது போல
ஆனால்
அணுக்குண்டுகள் செய்கிற
கனவுகள் காணக்கூடாது நீ

– உமிரோவியன்

காவலன் கலசம்

ஆரோக்கியமான வாழ்வுடன் இணைந்துள்ள உடற்பயிற்சியும் ஊட்டச்சத்துள்ள உணவும்

ஆரம்ப காலத்தில் மனிதன் இவ்வுலகில் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பெரிதும் போராடினான். உணவு, உடை, உறையுள், பாதுகாப்புப் பெற காடு மேடெல்லாம் அலைந்து உழைத்தான். இன்றைய நவீன மனிதனும் தன்னை நிலைநிறுத்த பெரிதும் பாடுபடுகின்றான். தனது அன்றாட கருமங்களை இலத்திரனியல் கருவிகளைப் பயன்படுத்தி இலகுவாக்கிக் கொள்வதில் ஆர்வமாக நாடுகின்றான். இதனால் இன்றைய மனிதன் மூளைக்கான வேலையிலேயே மூழ்கியுள்ளதால் உடல் உழைப்பை மறுதலித்துள்ளான்.

புதிய பிறப்பெடுத்துள்ள விரைவு ணவுக் கலாசாரம் இன்றைய இளம் சந்ததியினரை ஆட்டிப்படைக்கின்றது. மாப்பொருளும் கொழும்பும் நிறைந்த உணவுகள் உடலில் சேரச்சேர உடலானது மாமிச மலையாக உருவாகின்றது. மூளை தனக்குரிய சத்துக்களை பெறமுடியாமல் மந்த மாகி விடுகின்றது. தகவல் தொழிநுட்ப வளர்ச்சியினால் இன்று மனிதனைச் சூழ இலத்திரனியல் உபகரணங்களால் ஆன புதிய உலகைப் படைத்துள்ளான். அதனை விட்டு வெளியே வரமுடியாதவர்களாக மாறி விடுகின்றனர்.

இதனால் உடல் உழைப்பும், போதிய ஊட்டச்சத்தும் கிடைக்காமல் பல நோய்கள் மனிதனில் தஞ்சமடைகின்றன. இதனைத் தடுக்க முறையான உடற்பயிற்சியும் இயற்கையான ஊட்டச்சத்துள்ள உணவை உண்பதும் அவசியமாகின்றது.

அத்துடன் யோகாசனம், தியானம், மனம்விட்டு சிரித்தல் போன்ற பயிற்சிகள் எமது மனம், மூளை, உடல் என்பவற்றை தளர்த்துவதுடன் புத்துணர்ச்சியையும் அளிக்கவல்லன. வளர்ந்து வரும் இளம் சந்ததியினருக்கு உடல், உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்க வழிகாட்ட வேண்டும்.

இந்த வகையில் இன்று இளம் பருவத்தினரிடையே போசனைக் குறைபாடு உடல்நிறைக் குறைவு என்பன பற்றிய பிரச்சினைகள் குறைவடைந்து அதீத உடற்பருமன் தொடர்பான பிரச்சினை எழுந்துள்ளது.

இதற்குக் காரணம் அதிக உணவு உட்கொள்ளுகையும் போதிய உடற்பயிற்சி இன்மையும் ஆகும். கிராமப்புற மாணவர்களை விட நகர்ப்புற மாணவர்கள்

மரக்கறிகள், பச்சை இலைவகைகளை தமது உணவில் சேர்த்துக் கொள்வதனை வெறுக்கின்றனர். இவர்கள் றோல்ஸ், பீட்சா, பேஸ்ரி, சம்சா என்பவற்றை விரும்பி உண்கின்றார்கள். ஆனால் இவை அதிக கலோரி கொண்ட உணவுகளாகும்.

அடர்த்திகூடிய காபோவைதரேற்று உணவுகள் சக்தியைப் பெறுவதற்கும், புதர், இலிப்பிட்டு உணவுகள் வளர்ச்சிக்கும், பழங்கள், மரக்கறிகள் நோயிலிருந்து பாதுகாப்புக்கும் துணை புரிகின்றன. அதிகளவான தானியங்களையும், பழங்கள் மரக்கறிகள் மற்றும் குறைந்த கொழுப்புள்ள உணவுகளையும் தாம் உட்கொள்ள வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு ஆரோக்கியமானதாக அமையவேண்டும். பால் சேர்ந்த உற்பத்திப் பொருட்களையும் இவர்களுக்கு சேர்த்துக் கொள்ளவேண்டும். இதனால் இரைப்பை சம்பந்தமான நோய்கள், எலும்புகள் நலி வடைதல் தவிர்க்கப்படுகின்றன.

பெண் பிள்ளைகள் இரும்புச்சத்துள்ள மாமிச உணவுகளையும் இலை வகைகளையும் தமது உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

பழங்கள், மரக்கறிகள் என்பன அத்தியாவசிய மான விற்றமின்கள், கனியுப்புக்கள், ஒட்சியேற்ற நிரோதிகள், நார்ச்சத்து என்பவற்றை வழங்குகின்றது. இதனால் தொற்றுநோய்கள், உயர் குருதியமுக்கம், நீரிழிவு, புற்று நோய்கள் என்பன ஏற்படாமல் உடலிற்கு பாதுகாப்பு வழங்குகின்றது.

இயற்கையான முறையில் உற்பத்தி செய்யப்படும் உணவுகளிலிருந்து நாம் இவற்றைப் பெறுவதனால் இரசாயனப் பொருட்கள் எமது உடலில் சேர்வதைக் குறைக்கலாம். வீட்டில் சிறிய வீட்டுத்தோட்டம் அமைத்து அதிலிருந்து தூய மரக்கறி, இலைவகை, பழங்களை பெற்றுக்கொள்வது மிகவும் நல்லது.

அத்துடன் வீட்டுத்தோட்டம் அமைத்தல் சிறந்த பொழுதுபோக்கு செயற்பாடாக நாம் செய்யும் போது அது உடற்பயிற்சியாகவும் மனதின் மன உளைச்சலைக் குறைத்து மகிழ்ச்சியையும் தருகிறது.

சிலர் தமது உடல் நிறையை குறைக்க வேண்டும் என்பதற்காக உணவு உள்ளெடுப்பதை குறைக்கின்றனர். இதனால் இவர்களுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்பட அதிக வாய்ப்புண்டு. இளம் பருவத்தினர் அவர்களுடைய உயரத்திற்கு ஏற்ற வகையில் நிறையைக் கொண்டிருக்க வேண்டும்.

இளம் பருவத்தினர் தமது வளர்ச்சிக்கு மேலதிகமாக உடலினால் செய்யப்படும் வேலைகள், வாழ்க்கை முறைகள், உச்ச அளவில் சவால்களை எதிர்கொள்ளல், சூழலுக்கேற்ப மாறுந் தன்மை என்பனவற்றிற்கு அதிகமாக முகங்கொடுக்கப்படுவதால் இவர்கள் உடல் ஆரோக்கியம் தொடர்பாக கூடியகவனமெடுக்கவேண்டியவர்களாவர்.

எமது உயிரியற் தொகுதிகளின் சிறப்பான தொழிற்பாட்டுக்கு போதுமான நித்திரை தேவையாகும். அண்மைய ஆய்வின்படி நீண்டகால போதுமான நித்திரை இல்லாமை, உடல் நிறை அதிகரிப்பு, நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் என்பவற்றை ஏற்படுத்துகிறது என கூறுகின்றது.

மேலும் நித்திரைக் குறைபாடு பகலில் தெளிவாக ஆலோசிக்கும் திறனையும் குறைவான வேலைத் தொழிற்பாட்டுக்கும் வழிவகுக்கும். எனவே, எப்பொழுதும் திட்டமிட்டு வேலைகளை நாம் முடித்து விட்டு குறைந்தது 6 மணித்தியாலங்கள் நித்திரை கொள்ள வேண்டும்.

எமது பொழுதுபோக்கு நேரத்தில் நீச்சல், பந்து விளையாட்டுக்கள், நடத்தல், துவிச்சக்கரவண்டி ஓடுதல் போன்ற செயற்பாடுகளை செய்வதன் மூலமும் உடலை உயிர்ப்பாக வைத்திருக்க முடியும்.

இவ்வாறு எமது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்தால் ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதுடன் உயிர்ப்புள்ள எதிர்கால சந்ததியையும் நாம் உருவாக்க முடியும்.

அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)

கணவன் – மனைவி உறவு அற்புதமாக வலுப்படுத்தும் அன்பின் மொழிகள் ஐந்து

தாராளமாக அன்பைக் கொடுத்து பெற்று வாழ்வதே கணவன் மனைவி உறவின் மிக முக்கியமான நோக்கமாகும். மற்றவர் உணருகின்ற வகையில் அன்பை அவருக்கு ஏற்ற மொழியில் வெளிப்படுத்துவது மிகவும் முக்கியமாகும். எனவே கணவன் மனைவிக்கு இடையில் அன்பை வெளிப்படுத்த அன்பின் மொழிகள் ஐந்து உள்ளது.

1. பாராட்டி உறுதிப்படுத்தல்.

பாராட்டு வார்த்தைகள் மிகவும் அற்புதமான முறையில் ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தி ஊட்டம் அளிக்கிறது. பாராட்டு வார்த்தைகளில் அன்பு மிகவும் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது. நீங்கள் செய்த உதவிக்கு நன்றி, இந்த உடை உமக்கு அழகாக இருக்கிறது, இந்த சாப்பாடு மிகவும் சுவையாக இருக்கிறது என்று சொல்லி பாராட்டுகின்ற பொழுது உறவு மிகவும் அதிசயிக்கத்தக்க முறையில் வலுப்படுத்தப் படுகின்றது.

எனது வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்வை குறிப்பிட விரும்புகின்றேன்: ஒரு நாள் நான் யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட பங்கில் குடும்ப கருத்தமர்விற்காக சென்றிருந்தவேளை அங்கு ஒரு தம்பதியை சந்தித்தேன். கணவன் சக்கர நாற்காலியில் இருக்க மனைவி அவருக்கு துணையாக பக்கத்தில் இருந்தார். அப்பொழுது அம்மா விடம் கேட்டேன் உங்களுடைய கணவர் இரண்டு கால்களை இழப்பதற்கு போரின் கெடுபிடியா காரணம்? என்று கேட்டேன் அதற்கு மனைவி சொன்னார் இல்லை இல்லை பாதர் இவர் பிறப்பிலே இப்படித் தான் என்றார். நீங்கள் எப்படி இவரை திருமணம் செய்தீர்கள், வீட்டில் பேசி முடித்து வைத்தார்களா? அல்லது காதலித்து திருமணம் முடித்தீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர்நான் காதலித்துதான் திருமணம் செய்தேன் என்று சொன்னார். நான் ஒருகணம் அதிர்ந்து போனவனாய் கேட்டேன் அப்படி காதலித்து திருமணம் முடிப்பதற்கு இவரில் உங்களை கவர்ந்த விடயம் எது? என்று வினவினேன், அவர் சொன்ன பதில் என் மனதை தொட்டது. "உலகமே தேடிப்பார்த்தாலும் இப்படிப்பட்ட ஒரு கணவரை கண்டுபிடிக்க முடியாது" என்று கூறினார். அவ்வளவு அன்பும் கருணையும் தாழ்ச்சியும் புரிந்துணர்வும் கொண்டவர் என்று மிகவும் பெருமையாக அவரை பாராட்டினார். இந்த வார்த்தைகளை கேட்ட சக்கர நாற்காலியில் இருந்த கணவனுக்கு இரண்டு கால்களும் கிடைத்தது போல் அவருடைய உள்ளத்தை சென்று தொட்டு சென்றதை அவரது முகத்தில் பார்க்கக் கூடியதாய் இருந்தது. பாராட்டு வார்த்தைகள் மிகவும் சக்தி வாய்ந்தவை கணவன் மனைவி உறவை மிகவும் அற்புதமாக வலுப்படுத்தக் கூடியவை.

2.தரமான நேரத்தை ஒதுக்குதல்.

தரமான நேரம் என்று சொல்லுகின்ற பொழுது முழு அவதானத்தையும், கவனத்தையும் ஒருவருக்கொருவர் கொடுப்பதை குறித்து காட்டுகிறது. ஆழமாக செவிமடுத்தல் மிக முக்கியமான ஒரு விடயமாகும் என்பதை உளமாற கூறலாம். இதயம் திறந்து உறவாட அழைக்கப்படுகிறோம். எமது ஆழமான உணர்வுகள் எண்ணங்களை இருவருக்கிடையில் பகிர்ந்து கொள்வது உறவை வலுப்பெற செய்கிறது. பெண்களுக்கு அக்கறையான கவனிப்பும், கொள்ளுதல் தேவையான நேரத்தில் உடனிருத்தல் உடன் பயணித்தல் மிகவும் முக்கிய மாகும். ஆழமாக பரிவிரக்கத்துடன் செவிமடுத்தல் பரிந்துணர்வு அதிகரிக்கப்பட்டு அன்பு செய்யும் ஆற்றல் விருத்தி செய்யப்படுகின்றது.

அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)

3. அன்பளிப்புகள் கொடுத்தல்.

உலகத்திலே இருக்கின்ற அனைத்து பண்பாட்டிலும் அன்பின் அடையாளமாக அன்பளிப்புகள் கொடுக்கப்படுகின்றன கணவன் மனைவி உறவிலும் தாங்கள் காதலித்த காலத்தை மீட்டு பார்த்தால் இது எவ்வளவு தூரம் உண்மை என்பது புரியும். அன்பளிப்புகள் அன்பின் வெளிப்படையான அடையாளமாக இருக்கின்றது. குறிப்பாக பெண்கள் அன்பளிப்புக்களில் வழங்கப்படுகின்ற பொருட்களை விட அதற்குள் வெளிப்படுத்தப்படுகின்ற ஆழமான அன்புணர்வையே எதர்பார்க்கின்றனர். அன்பின் அடையாளமாக அன்பளிப்புக்கள் கொடுப்பதும் பெற்றுக் கொள்வதும் கணவன் மனைவி உறவை மகிழ்ச்சி மிக்கதாக மாற்றுகின்றது. தன்னையே ஒரு கொடையாக கொடுப்பதே மிகச் சிறந்த கொடையாகும்.

துன்ப துயரங்களை பகிர்ந்து பரிவிரக்கத்துடன் கூடிய செவிமடுத்தலும், ஆற்றுப்படுத்தலும் மிகவும் முக்கியமாகின்றது.

உதாரணமாக இருவரும் சேர்ந்து ஆலயத்திற்கு செல்லல், படம் பார்க்கச் செல்லுதல், கடற்கரைக்கு செல்லுதல் போன்ற செயற்பாடுகளை செய்கின்ற பொழுது அன்பு வெளிப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப் படுகின்றது.

துன்ப துயரங்களை பகிர்ந்து பரிவிரக்கத்துடன் கூடிய செவிமடுத்தலும், ஆற்றுப்படுத்தலும் மிகவும் முக்கியமாகின்றது.

4. பணிவிடை செய்தல்

ஒருவருக்கொருவர் பணிவிடை செய்தல் அன்பின் மிகச்சிறந்த வெளிப்பாடாக இருக்கின்றது. கிறிஸ்து தனது அன்பை வெளிப்படுத்த தன்னுடைய சீடர்களுடைய பாதங்களை கழுவி முத்தமிட்டதை இங்கு நாம் ஆழமாக சிந்திப்பது பொருத்தமானதாக இருக்கும். பணிவிடை செய்தல் சமயலறையிலே தொடங்கப்படுகின்றது. சமைப்பதற்கு உதவி செய்தல், காய்கறிகளை துப்பரவு செய்து கொடுத்தல், தேவையான பொருட்களை வேண்டி கொடுத்தல் இவ்வாறான சிறு சிறு பணிவிடைகளை மகிழ்ச்சியோடும் அக்கறையோடும் செய்கின்றபொழுது உறவு வலுப்படுத்தப்படுகிறது. பணிவிடை செய்தல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஒரு அன்பின் வெளிப்பாடாக வெளிப்படுத்தப்படுகின்றபொழுது உறவு மகிழ்ச்சி மிக்கதாக மாறுகிறது.

5. தொடுதல்.

தொட்டுப்பேசுதல், கரம்பிடித்து நடத்தல், அணைத்தல், அரவணைத்தல், தோளில் தட்டிக்கொடுத்தல் ஆகியவை எல்லாம் அன்பின் வெளிப்பாடுகளாகும். தொடுதல் என்கின்ற பொழுது பாலுறவை மட்டும் குறித்து காட்டுவது அல்ல மாறாக உறவு நெருக்கத்தை, அன்பான அக்கறையுணர்வை, பரிவிரக்கத்தை வெளிப்படுத்த கையாளப்படுகின்றது. கணவன் இவ்வாறு அன்பை வெளிப்படுத்துவதை மனைவி பெரிதும் விரும்புவார். மனைவியும் இவ்வாறு அன்பை வெளிப்படுத்துவதை கணவர் ஏற்றுக்கொள்வார்.

அன்பின் மொழிகள் ஐந்தும் கணவன் மனைவி இருவருக்கும் தேவை. இதில் முக்கியமாக அவதானிக்க வேண்டியதுஎந்த அன்பின் மொழி தேவைப்படுகின்றது என்பதை இனம் கண்டு அந்த மொழியை பேசுவது கணவன் மனைவி உறவில் மிக அற்புதமான உறவு நெருக்கத்தை ஏற்படுத்தும்.

யாழ்ப்பான மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

பின்னணி, தோற்றம், வளர்ச்சி

(சென்ற இதழ் திருத்தம்)

ஆயர் ஸ்ரீபன் செமேரியா யாழ் (வடக்கு) திருத்தூது மறை மாவட்டத்தின் இரண்டாவது ஆயரும் அமல மரித்தியாகிகள் சபையின் முதலாவது ஆயருமாவார்.

செமேரியா அ.ம.தி அடிகளின் குருத்துவப்பணி ஆரம்பம்

செமேரியா அ.ம.தி அடிகள் வழமைக்கு புறம்பாக மிகவும் இளம் வயதில் (22) குருவாக திருநிலைப் படுத்தப்பட்டாலும் ஞான முதிர்ச்சியினால் அவர் தமது வயதிலும் பார்க்க கூடுதல் அடைவை எட்டியிருந்தார் என்று தான் சொல்ல வேண்டும். பின்னர் இவர் தமது தோழர்களுடன் பகிரும் போது தமது அருட்பொழிவின் போது அவர் தம்மில் ஒரு உள்ளார்ந்த மாற்றத்தை உணர்ந்ததாகவும் அன்றிலிருந்து சோம் பல் மற்றும் பராக்குகளுக்கு எதிராகப் போராடி தமது புதிய பணியை காத்திரமான ஒரு பணியாக முன்னெடுக் கத்தமக்கு பெரும் சிரமங்கள் ஏற்பட்ட தில்லையென்றும் குறிப்பிடுவார் என்று பிலிப் யேசுதாசன் அ.ம.தி அடிகள் இலங்கையில் துவக்கத்திலிருந்து பணி யாற்றிய அமலமரித்தியாகிகள் பற்றிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்சில் மேற்கு கரையில் உள்ள துறைமுக நகராகிய மார்செயில் ஸில் உள்ள துறைமுகத்தில் ஊழியர்களா கப் பணிபுரிந்து வந்த இத்தாலியர்கள் மத்தியில் பணியாற்றி வந்த அல்பீனி அ.ம.தி. அடிகளாருக்கு துணைக் குரு வாகப் பணியாற்ற இளம் புதிய குரு வாகிய செமேரியா அ.ம.தி அடிகள் அனுப்பப்பட்டார். துறைமுகத்தில்பணியாற் றிய இத்தாலியத் தொழிலாளர்களது ஆன் மீக நிலைமை மிகவும் மோசமான நிலை யிலிருந்தது. எனவே குருக்கள் ஓய்வின்றிப் பாணியாற்ற வேண்டிய தேவையிருந்தது. செமேரியா அடிகள் இத்தாலிய பிரான்ஸ் எல்லைக்கிராமமாகிய வெந்திமில்லியா என்ற இடத்தைச்சேர்ந்தவராகியதால் இவ ருக்கு இத்தாலிய மொழி நன்கு தெரிந்திருந் தமையும் இவர் இப்பணிக்குத்தேர்ந் தெடுக்கப்பட்டமைக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

பின்னர் வன்முறைகளுக்கும், பழிக்குப்பழி வாங்குவதும், இரத்தம் சிந்து வதும் சர்வசாதாரணமாகவிருந்த கோர்சிக் காத்தீவுக்கு பணிமாற்றம் செய்யப்பட்ட போது செமேரியா அடிகள் மார்செயில்ஸ்

அருட்பணி S.V.B. மங்களராஜா

துறைமுகப்பணியாளர் மத்தியில் பணி யாற்றும் முழுப்பொறுப்பையும் ஏற்றிருந் தமை குறிப்பிடத்தக்கது. அங்கு இவர் பணியாற்றிய நான்கு வருட பணிக்காலம் மிகுந்த பயனைத்தந்தது. அத்துடன் இவரது வருங்கால இலங்கைப்பணிக்கும் நல்ல தயாரிப்பாயிருந்தது. குறிப்பாக இவர் அங்கு வழங்கிவந்த வாராந்த அறி வுரைகளும் அங்கு வாந்திபேதி பரவிய போது இவரது துணிவான அர்ப்பணம் மிகுந்த சேவை பல வருடங்களாக நன்றி யுடன் நினைவுகூரப்பட்டது.

அல்பீனி அடிகள் 1839ம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி இறைவனடி சேர்ந்தபோது அவ்விடத்திற்கு அனுப்ப ஆயர் புனித யூஜின் டி மசனட்டின் தெரிவு செமேரியா அடிகளாகத்தானிருந்தது. மார் செயில்ஸ் துறைமுக நகரில் கணிசமான தொகையினராக இருந்த இத்தாலிய துறை முகத்தொழிலாளிகளதும் அவர்களது குடும்பங்களதும் நன்மதிப்பை பெற்றிருந்த செமேரியா அடிகளுக்கு அங்கிருந்து வெளியேறுவது சற்றுச்சிரமமாகவிருந் தாலும் மேலதிகாரிகளின் பணிப்புரைக்குப் பணிந்தவாறே மறுவார்த்தை சொல்லாது மகிழ்வுடன் தெவேர்ணோ அடிகளுடன் கோர்சிக்காத்தீவுக்குப் பணிபுரியச் சென் றார். அங்குள்ள பெரிய குருமட அதிபராக வும் குயிடிபேட் (Fr. Gui de Guibert) அடிகளின் வழிநடத்துதலுடனும் அஜாச் சியோ (Ajaccio) மறைமாவட்டத்தின் குருமுதல்வராகவுமிருந்தார் அ.ம.தி. குழும முதல்வராகவும் அமலமரித்தியாகிக ளின் மறைப்பணித்தள முதல்வராகவும் செமேரியா அடிகள் பணியாற்றினார் செமேரியா அடிகள் அமலமரித்தியாகிகள் இல்லத் தலைவராகவும் கோர்சிக்காத் தீவிலுள்ள அமலமரித்தியாகிகள் மறைத்த ளங்களின் பொறுப்பாளராகவும் நியமனம் பெற்றார். இவர் கோர்சிக்காத்தீவில் பணி யாற்றிய ஏழு வருடங்களும் அத்தீவின் ஆன்மீகவளர்சியைப் பொறுத்த மட்டில் ஒரு பொற்காலம் எனலாம் இவர் தமக்கு முன் பணியாற்றிய அல்பீனி அடிகள் ஆற்றிவந்த பணிகளைத் தொடர்ந்து முன் னெடுத்து நிறைவு செய்தார் என்று தான் சொல்லவேண்டும் அத்தீவில் வாழ் மக்களுக்குப்பணிபுரிந்து அவர்களின் மொழியையே பேசி அவர்களது நன்மதிப்பைப் பெற்று அவர்களது அன்பிற்குரியவரானார். அவரது பக்தி, ஆன்மதாகம், அர்ப்பணவாழ்வு, சுய மறுப்பு, மென்மையான சாதுரியமான புத்திசாலித்தனமான அணுகுமுறை ஆகிய திருத்தூது சார் நற்பண்புகள் அங்குவாழ் மக்களை அவருக்கு நெருக்க மாகக் கொணர்ந்தன.

இவரது இனிமையான பண்புகள், புனிதமான வாழ்க்கை, ஆன்ம வாஞ் சையை வெளிக்கொணரும் மறையுரை கள் முரட்டுத்தனத்திற்குப்பெயர் பெற்ற கோர்சிக்காத்தீவு வாழ் மக்களில் பாரிய தொரு மனமாற்றத்தைக் கொணர்ந் தது. பல தலைமுறைகளாகத் தம்மிடையே குரோதங்களை வளர்த்து வந்த குடும்பங் களிடையே ஒப்புரவை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டார் அச்சமூகத்தில் அடாவடித் தனங்களிலும் வழிப்பறிக்கொள்ளைகள் போன்றவற்றில் ஈடுபட்டு வந்தோரை நல்வழிக்குக் கொண்டுவந்தது மட்டுமன்றி அவர்கள் தம் தீய செயல்களுக்குத்தகுந்த பரிகாரங்களையும் செய்யப்பண்ணினார்.

இவ்வாறாக ஒரு காலத்தில் பரஸ்பர வெறுப்பும், பழிவாங்கலும் பல்லாண்டு காலமாக கோலோச்சியதொரு இடத்தில் அமைதியையும், கிறீஸ்தவ அன்பையும் நிலைநாட்டியமை இவரது சாதனை யாகும்.

கோர்ச்சிக்காத்தீவில் அமல மரித்தியாகிகளின் குழும முதல்வராக செமேரியா அடிகள் ஆற்றிய பணியனு பவம் பிற்காலத்தில் இலங்கையில் யாழ்ப் பாணத்திருத்தூது மாவட்ட ஆயராகவும் அங்கு அப்போது பணியாற்றியவர்களுள் பெரும்பான்மையானர்களாக இருந்த அமலமரித்தியாகிகளது பொறுப்பாளராக வும் பணியாற்றச்சிறந்த தயாரிப்பை வழங்கியது எனலாம்.

(தொடரும்...)

பகுத்தறிவு...

சிறுகதை

உபாத்தியார் என்று அன்போடு அழைக் கப்படும் மாட்டீன் மாஸ்ரர் அரசாங்கப் பாடசாலையில் வேலை செய்து மாணவர் களின் நலன்களில் அக்கறையோடும் தனது குடும்பத்தில் அக்கறையோடும் மாணவர்களையும் தன் பிள்ளைகளை யும் ஆளாக்கி வந்தார்.

தனது மூத்த மகளின் திருமணத் திற்கு பட்ட கடனுக்காக தனது வீட்டின் பின்புறத்தில் வீட்டுத் தோட்டம் செய்து, பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரத்தை தனது சொந்த வருவாய்க்காக வீட்டுத் தோட்டத்தில் பல பயிர் வகைகளை நாட்டி சந்தைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்யும் அளவிற்கு தோட்டத்தை அமைத்து இலாபம் பெற்று பட்ட கடனையும் அழித்தார்.

வீட்டுத்தோட்டம் பெரும் விவ சாயமாக மாறி வளர்ச்சி கண்ட நேரத்தில் வாட்டம் ஏற்பட்டது. மாஸ்ரருக்கு எது வுமே புரியவில்லை. மாணவர்களின் கல்வியில் வாட்டம் ஏற்பட்டால் அதனைக் கண்டுபிடித்து பரிகாரம் செய்யும் மாஸ்ட ரால் தோட்டத்தில் ஏற்பட்ட வாட்டத்திற்கு காரணம் தெரியவில்லை.

விவசாயத் திணைக்களத்திற்குச் சென்று அறிந்து வருவோமென்று புறப் பட்ட மாஸ்ரர் விவசாயத் திணைக்கள உத்தியோத்தர் முன் சென்றார். அந்த அதிகாரி மாஸ்ரரைக் கண்டதும் உடனே எழுந்து நின்று வணக்கம் மாஸ்ரர் என் றார். தன்னை மாஸ்டர் என்று அவருக்கு எப்படித் தெரியும் என்பது மாட்டீன் மாஸ்ர ருக்குப் புரியாது இருந்த நிலையில் மாஸ் ரரை தனக்கு முன் உள்ள ஆசனத்தில் அமர்த்திவிட்டு. "மாஸ்டர் என்னைத் தெரியவில்லையா? நான் உங்களிடம் தான் படித்தேன்" என்று அதிகாரி சொன்னதும் மாஸ்டருக்கு அப்போது தான் இனம் காண முடிந்தது. "ஏன் மாஸ்டர் வந்தனீங்கள். சொல்லி அனுப்பி யிருந்தால் நானே வந்திருப்பேனே? சொல்லுங்கள் மாஸ்டர் உங்களுக்கு என்ன வேணும்" என்று கேட்டார். மாஸ்டரும் தான் சொல்லவந்த விடயங்க ளைச் சொன்னதும் அதிகாரியான மாண வன் மாஸ்டரை அந்தக் கணமே தனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு மாஸ்டர் வீட்டிற்குச் சென்றார்.

பயிர்களைப் பார்வையிட்ட பின் பயிர்க

ளைப் பூச்சி அரிப்பதாகவும் அதற்கு மருந்து அடிக்கவேண்டும் எனவும் கூறி தனது வேலையாட்களைக் கொண்டு அதனைத் தான் செய்விப்பதாக செய் நன்றி மறவாத மாணவனாக அதிகாரி அவ்விடத்தில் நடந்துகொண்டார்.

பூச்சி மருந்து அடித்த பின்பு பயிர்களின் வளர்ச்சி அமோகமாக விளைந் தது. முன்பு கிடைத்த இலாபத்தில் பல மடங்கு இலாபம் கிடைத்தது. மரக்கறி களில் ஒரு பகுதியை தனது தோளில் சுமந்து அதிகாரியான மாண வன் வீடு தேடி மாஸ்டர் சென்றார்.

குறிப்பிட்ட நாட்களின் பின் ஒரு நாள் அதிகாலை எழுந்து பயிர்க ளைப் பார்ப்பதற்காக மாஸ்டர் சென்ற

எஸ்.பி.பீற்றர் போல் யாழ்ப்பாணம்.

போது அங்கு பகுத்தறிவில்லாத மிருகங் கள் பயிர்களை நாசம் செய்துகொண்டி ருப்பதைக் கண்டு அவற்றைத் துரத்தி விட்டு, ஐந்தறிவுப் பிராணிகள் அல்லவா? இவைகளுக்கு ஏது நல்லறிவு. நாம் தானே பாதுகாப்பாக இருந்திருக்க வேண் டும் என உணர்ந்து சுற்றியுள்ள வேலிகளைப் பிடுங்கி எறிந்து விட்டு மாஸ்டர் பாதுகாப்பாக சுற்றுமதில் அமைத்தார்.

மாட்டீன் மாஸ்டர் மனிதர்களின் சுய கௌர வத்தை மதிப்ப வர். மற்றவர் களுக்காக தன்னை உடைத்துக் கொடுப்ப வர். ஒரு முறை பாடசாலையில் உயர்தர மாணவர்கள் சண்டை பிடித்தபோது அதிபராலும் அதை அடக்க முடியவில்லை. மாணவர்களுக்கு அறிவுரை கூறி அவர்க ளைத் திருத்த முற்பட்டபோது மாணவன் ஒருவன் தன் தவறை உணர்ந்து அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். அடுத்த மாணவனோ முரண்பாடு பிடித்து மாஸ்டரை அவமரியாதை செய்தான். இதைப் பார்த்த காலில் விழுந்த மாண வன் மற்ற மாணவனைத் தாக்க முற்பட்ட போது அதையும் தடுத்து நிறுத்தி அவர்க ளுக்கு அறிவுரை கூறிய மாஸ்டர் "ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன் னத்தையும் காட்டு" என்ற இயேசுவின் வாக்கை வாழ்க்கையில் காப்பாற்றினார்.

மாட்டீன் மாஸ்டர்ருக்குத் தெரிந்த பிரிய நண்பன் தனது வீட்டில் நடைபெறு கின்ற கொண்டாட்டத்திற்காக சந்தைக்கு வந்திருந்தபோது அங்கு மாஸ்டரைக் கண்டு உரையாடினான். அப்போது மாஸ்டர் உனக்குத் தேவையான மரக்கறி வகைகள் சிலவற்றில் நானே தருகிறேன். நாளை காலை என் வீட்டிற்கு வா என்று சொல்லி சென்று விட்டார்.

மறுநாள் அதிகாலை தன் நண் பனுக்கு கூறியபடி மரக்கறிகளை எடுப்ப தற்காக தோட்டத்திற்கு சென்ற மாஸ்டர் அங்கு மரக்கறிகள் எதுவுமற்று பயிர்கள் மாத்திரம் இருப்பதைக் கண்டார். மரக் கறிகளுக்கு என்ன நடந்தது என்று ஏங்கி நின்றபோதுதான் முதன் நாள் இரவு பகுத்தறிவுள்ள மனிதத் திருடர்கள் அவற்றை பறித்துச் சென்றமையை அவரால் உணரமுடிந்தது

பூச்சிகளால் சேதம் வந்தபோது மருந்தடித்த மாஸ்டர் விலங்குகளால் சேதம் வந்தபோது மதில் கட்டிய மாஸ்டர் மனிதர்களால் களவாடப்பட்டபோது இனி என்ன செய்யலாம் என்று சிந்தித்தார். பகுத்தறிவற்றவை வேறு ஆனால் பகுத் தறிவுள்ளவர்களும் இப்படித்தான் இந்த உலகில் வாழ்கிறார்கள். மரக்கறிகள் அல்ல மனித மனங்களும்இப்படிப்பட்டவர் களால் இன்றும் அழிக்கப்பட்டும், பறிக் கப்பட்டும் வருகின்றன. பகுத்தறிவற்ற வைகளிலிருந்து பாதுகாக்க மதிலைக் கட்டலாம். பகுத்தறிவுள்ளவர்களிடமிருந்து பாதுகாக்க என்ன செய்யலாம்.

யாழ் மறைமாவட்டப் பங்குகளின் விசேட நிதி சேகரிப்பு - 2017

இல	பங்கு	திருப்பாலத்துவ தினம்	பரிசுத்த வாரம்	இறை அழைத்தல் தினம்	பாப்பரசர் தினம்	சுதேச குருக்கள் தினம்	மறைபரப்பு தினம்	நல்லாயன் தினம்	கிறிஸ்மஸ் தினம்
யாழ்ப்பாண மறைக்கோட்டம்									
1	பேராலயம்	24000.00	56500.00	22000.00	15000.00	26500.00	191300.00	30000.00	42000.00
2	குருநகர்	15500.00	75000.00	18000.00	15200.00	14600.00	120000.00	70000.00	21800.00
3	O.L.R	3050.00	20740.00	5200.00	4500.00	2280.00	18500.00	38850.00	3000.00
4	பாஷையூர்	20000.00	42000.00	15000.00	9250.00	13000.00	36000.00	25000.00	17000.00
5	நாவந்துறை	6600.00	43240.00	12000.00	8000.00	10250.00	202155.00	18720.00	15360.00
6	அஞ்சனந்தாழ்வு	1200.00	15390.00	3270.00	4254.00	5680.00	4370.00	5340.00	4990.00
7	பண்டியன்தாழ்வு	13500.00	14000.00	15150.00	3500.00	5000.00	17500.00	11500.00	12000.00
8	கொழும்புத்துறை	5250.00	11000.00	8000.00	-------	5510.00	10200.00	12500.00	------
9	கொய்யாத்தோட்டம்	5150.00	15000.00	6530.00	3000.00	3500.00	6220.00	4780.00	9400.00
10	திருநெல்வேலி	3580.00	8200.00	4100.00	2480.00	4350.00	4420.00	2100.00	4320.00
11	கோப்பாய்	6700.00	28500.00	4700.00	4000.00	10000.00	7000.00	6000.00	10000.00
12	சுண்டிக்குளி	16000.00	30120.00	20060.00	10020.00	14200.00	21600.00	27500.00	25000.00
13	நல்லூர்	3824.00	12310.00	6780.00	2675.00	4557.00	5625.00	6460.00	6000.00
14	மணியந்தோட்டம்	8022.00	29000.00	12000.00	8000.00	8750.00	11750.00	16000.00	10000.00
தீவக மறைக்கோட்டம்									
1	மண்டைதீவு	7400.00	11600.00	7600.00	3200.00	3300.00	8400.00	8800.00	7400.00
2	கரம்பன்	2100.00	4200.00	3550.00	2150.00	3000.00	5200.00	20000.00	4500.00
3	நாரந்தனை	5000.00	7700.00	5720.00	3400.00	2800.00	2710.00	21000.00	4000.00
4	ஊர்காவற்துறை	7040.00	14000.00	7300.00	----------	8000.00	50000.00	12760.00	22000.00
5	சாட்டி/அல்லப்பிட்டி	3300.00	6000.00	4000.00	----	4800..00	6000.00	5500.00	5000.00
6	புங்குடுதீவு	6750.00	7700.00	3250.00	4500.00	8150.00	9000.00	6400.00	3200.00
7	நெடுந்தீவு	4000.00	18000.00	----------	3250.00	4650.00	5550.00	81911.00	5000.00
இளவாலை மறைக்கோட்டம்									
1	இளவாலை	21898.00	21306.00	19327.00	4780.00	11750.00	27558.00	46680.00	27751.00
2	மாதகல்	5446.00	20000.00	7440.00	2000.00	4700.00	28600.00	7200.00	8400.00
3	சில்லாலை	5500.00	23000.00	12000.00	13000.00	12500.00	14500.00	20000.00	15000.00
4	பண்டத்தரிப்பு	5605.00	7400.00	9100.00	1800.00	4700.00	7000.00	6200.00	-------
5	விளான்	5170.00	20145.00	6170.00	2150.00	3050.00	3460.00	5340.00	11425.00
6	மானிப்பாய்	16320.00	43570.00	17000.00	14020.00	14450.00	35810.00	16630.00	27000.00
7	மாரீசன்கூடல்	1900.00	8000.00	4000.00	2100.00	1500.00	10500.00	2000.00	6900.00
8	உரும்பிராய்	20450.00	8100.00	6500.00	8000.00	9200.00	15500.00	60000.00	5500.00
9	ஆனைக்கோட்டை	10500.00	16650.00	13550.00	5000.00	6720.00	13500.00	32400.00	6350.00
10	குளமங்கால்	20200.00	41600.00	21000.00	15300.00	17200.00	18570.00	21810.00	-------
11	மல்வம்	2000.00	4000.00	2000.00	3000.00	3000.00	3000.00	20000.00	5000.000
12	வலித்தூண்டல்	1000.00	2000.00	1500.00	9000.00	700.00	1500.00	3900.00	3100.00
பருத்தித்துறை மறைக்கோட்டம்									
1	பருத்தித்துறை	16000.00	35000.00	15000.00	5500.00	14000.00	21500.00	21000.010	20000.00
2	தாளையடி	9040.00	12700.00	2236.00	2435.00	2365.00	3130.00	2280.00	3348.00
3	அச்சுவேலி	10800.00	5550.00	1650.00	4000.00	3300.00	5100.00	3500.00	6100.00
4	கரவெட்டி	4000.00	7000.00	2500.00	3000.00	4000.00	7000.00	8000.00	7000.00
5	மிருசுவில்	4500.00	9000.00	4000.00	3000.00	7340.00	8300.00	4500.00	------
6	சாவகச்சேரி	5000.00	30000.00	22000.00	7000.00	20000.00	21000.00	22500.00	-------
7	மணற்காடு	6000.00	6000.00	4000.00	3000.00	3000.00	7000.00	50000.00	3000.00
8	சக்கோட்டை	20590.00	27800.00	14500.00	6000.00	16880.00	21190.00	26840.00	12000.00
9	பளை.முகமாலை	2600.00	5000.00	---------	1490.00	2650.00	2180.00	6460.00	3800.00
10	கட்டக்காடு	---------	---------	---------	--------	1850.00	45080.00	3150.00	3100.00
கிளிநொச்சி மறைக்கோட்டம்									
1	கிளிநொச்சி	5700.00	7700.00	5000.00	5000.00	5200.00	12720.00	10000.00	18500.00
2	வலைப்பாடு	5000.00	16000.00	7000.00	5000.00	3000.00	25000.00	20000.00	10000.00
3	உருத்திரபுரம்	5840.00	15520.00	3010.00	3470.00	3520.00	5300.00	14000.00	5620.00
4	வட்டக்கச்சி	3450.00	11000.00	3000.00	1500.00	1500.00	30050.00	2000.00	------
5	மல்லாவி	1000.00	500.00	2000.00	500.00	500.00	2000.00	2000.00	------
6	முழாங்காவில்	3000.00	9270.00	6047.00	2020.00	8860.00	8000.00	15650.00	------
7	குமழமுனை	2000.00	3000.00	1200.00	1000.00	1950.00	15300.00	3100.00	3000.00
8	பூநகரி	2460.00	4420.00	1740.00	2020.00	3540.00	3540.00	3060.00	5430.00
9	பரந்தன்	2100.00	5090.00	2240.00	1500.00	4200.00	4000.00	3800.00	------
10	அக்கராயன்	2600.00	6000.00	4000.00	2000.00	3200.00	3720.00	2000.00	------
முல்லைத்தீவு மறைக்கோட்டம்									
1	முல்லைத்தீவு	13450.00	25000.00	11000.00	3000.00	5000.00	15000.00	15000.00	11000.00
2	புதுக்குடியிருப்பு	5000.00	8500.00	2700.00	4100.00	2500.00	10000.00	5000.00	------
3	மாங்குளம்	1000.00	3000.00	1000.00	900.00	1500.00	3000.00	2500.00	------
4	இரணைப்பாலை	12000.00	30000.00	6000.00	4000.00	14000.00	15000.00	20500.00	10000.00
5	அளம்பில்	4370.00	5350.00	926.00	3200.00	4780.00	1158.00	2012.00	2000.00
6	கூழாமுறிப்பு	5750.00	8000.00	4000.00	2500.00	2500.00	5000.00	5000.00	------
7	கொக்கிளாய்	4352.00	3500.00	4000.00	1100.00	3490.00	1300.00	800.00	1200.00
8	உடையார்கட்டு	---------	----------	----------	----------	---------	4000.00	4250.00	3500.00
9	தர்மபுரம்	4550.00	6210.00	2280.00	----------	1200.00	6500.00	5500.00	------

ஆயர் இல்லம். யாழ்ப்பாணம். நிதிமுகாமையாளர் அருட்பணி செ. நேசநாயகம்

நீங்காத நினைவில் பத்தாவது வருடம்

அருட்பணியாளர்
M.X.கருணாரட்ணம்
(கிளி பாதர்)

அன்னை மடியில்
12 . 04 . 1951
ஆண்டவன் அடியில்
20 . 04 . 2008

அர்ப்பண வாழ்வுக்கு
அர்த்தம் கொடுத்த பணிக்குரு
கண்ணீராலும் இரத்தத்தாலும் தோய்ந்த
தமிழனின் வரலாற்றுப் பக்கங்களில்
தலை நிமிர்ந்த தன்மானத் தமிழின் குரு
குண்டு மழை பொழிந்த மண்ணில்
கருணை மழை பொழிந்த மேகம்
நீதியின் தாகத்தால் வீதிக்கு வந்த
இயேசுவின் உண்மைச் சீடன்
மறைவாக உம்மை வீழ்த்திவிட்டதாக
யாரும் நினைத்தால் அது தவறு
நீர் விழவில்லை ! வாழ்கின்றீர்...
கோதுமை மணியாக..

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 20.04.2018 நீர்கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயத்தில் காலை 6.15 மணிக்கும் வவுனிக்குளம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் காலை 10.30 மணிக்கும் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

நீர் கொழும்பு

அருட்பணி.M.X.ஞானரட்ணம்.
சகோதர சகோதரிகள் குடும்பத்தினர்

என்றும் எம் நினைவில் நீங்கா நினைவு

23 ம் ஆண்டு நினைவுகளில்...

மண்ணில்
02 . 06 . 1936

விண்ணில்
13 . 04 . 1995

சத்தியநாதன் அந்தோனியாப்பிள்ளை

வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்
உமது முன்னிலையில் எனக்கு
நிறைவான மகிழ்ச்சி உண்டு
வலப்பக்கத்தில் எப்போதும்
பேரின்பம் உண்டு (தி.பா: 16-11)

37ம் ஆண்டு நினைவுகளில்...



யோசப் சத்தியநாதன் (டேவிற்)
மண்ணில்: 15.09.1927
விண்ணில் : 23.06.1981
ஜோ மரியதாஸ்
163, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

A/D34

விண்ணக வாழ்வின் 5ம் வருட நினைவு

பிறப்பு
05 . 07 . 1939

இறப்பு
16 . 04 . 2013

ஆறுமுகம் யோசவ்
(மணியம்)

திருக்குடும்பமாக எம் குடும்பம்
திகழ வைத்த தியாக உருவே
கானாவூர் கனிரசமாய்
காலத்தில் இனித்து நின்று
அனைவரையும் வாழவைத்த
ஆல விருட்சமே
உம் நிழலில் நாம் இளைப்பாற
உத்தமமும் உண்மையுமான ஊழியனாய்
நீர் இறை நிழலில் இளைப்பாற
சோதி தோன்றும் தேசமதில்
சந்திக்கும் வரை
உம் ஆன்மாவுடன் பயணித்து
நினைவுகளால் தழுவுகிறோம்

AD31

பரலோக மாதா ஆலயம்
நீர்வேலி வடக்கு.

குடும்பத்தினர்
அருட்தந்தை.யோ.பிரான்சிஸ்

2ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கன்யூட் இம்மானுவல்
(புகைப்படக் கலைஞர்)

தோற்றம் 05 . 04 . 1985
மறைவு 24 . 04 . 2016

" என்னிடம் நம்பிக்கை கொண்டவன்
இறப்பினும் வாழ்வான் "

842,ஆஸ்பத்திரீ வீதி
யாழ்ப்பாணம்

அன்புடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்

Ad 35

விண்ணக வாழ்வின் 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
04 . 01 . 1944

மறைவு
29 . 04 . 2013

AD37

அமரர்
பீற்றர் இம்மனுவல் றூபசிங்கம்
(பாலசிங்கம்)

இரக்கம் நிறைந்த யேசுவே! உம் அடியானாகிய பீற்றர் இம்மானுவெல் றூபசிங்கத்திற்கு நீர் அளித்த வாழ்வென்னும் கொடைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.இவர் மீது உமது எல்லையில்லக் கருணையைப் பொழிந்து இவரது குறை குற்றங்களை மன்னித்து, உமது நித்திய அரவணைப்பில் இவரைச் சேர்த்தருளுமாறு உம்மை இரந்து மன்றாடுகின்றோம்

466/7,கோவில்வீதி 1ம் ஒழுங்கை,
சுண்டுக்குளி யாழ்ப்பாணம்

பாசமுடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்

31ம் நாளி நினைவு அஞ்சலி

மண்ணில்
25 . 03 . 1934

விண்ணில்
11 . 03 . 2018

அமரர்
கசில்டா மங்களநாயகி
மரியாம்பிள்ளை

AD32

"நான் பசியாய் இருந்தேன்.நீங்கள் உணவு கொடுத்தீர்கள். நான் தாகமாய் இருந்தேன்.என் தாகத்தை தணித்தீர்கள். மிகச்சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்"

இவரின் ஆன்மசாந்திக்காக 10.04.2018 செவ்வாய்க்கிழமை அன்று காலை 5.30 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இல.5(30), சென்.பற்றிக்ஸ் வீதி
யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்

இறப்பின் ஓராண்டு நினைவு

பிறப்பு
18 . 04 . 1958

இறப்பு
18 . 04 . 2017

அமரர்
சாமிநாதர் யோசவ் அன்ரன்

அறுபதாவது அகவையில்
ஆண்டவரிடம் நீவிர் சென்ற
ஓராண்டை நினைக்கையிலே
எம்முள்ளமும் உணர்வும்
தவியாய்த் தவிக்குதையா!
எம் காவல் தெய்வம் நீர்
கலங்கரை விளக்கு நீர்
கதியிழந்து கண்ணீரில் வருந்தும் எமக்காய்
கடவுளிடம் பரிந்துரைப்பீர்

AD34

புனித.செபஸ்தியார் வீதி,
சில்லாலை

பிரிவுத்துயரில் வருந்தும்
அன்பு மனைவி,அருமைப்புதல்வர்கள்,
பாசமிகு சகோதர சகோதரிகள்,
மைத்துனர்,மருமக்கள்,உறவினர்,நண்பர்கள்

4ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
வெலிச்சோர்ப்பிள்ளை எட்வேட்ராஜா

பிறப்பு
05 . 12 . 1935

இறப்பு
22 . 04 . 2014

கருணைத் தெய்வமே உமது அடியான் வெலிச்சோர்ப்பிள்ளை எட்வேட்ராஜா மீது இரக்கம் காட்டி அரவணைத்து நித்திய பேரின்ப வீட்டில் இடம் அருள வேண்டுமென்று உம்மை இரந்து மன்றாடுகிறோம்.
ஆமென்.

Ad 33

தபால்கந்தோர் வீதி
சாவகச்சேரி

மகன் : பிறேம்குமார்
பெறாமகள் : கிறிஸ்ரினா
உற்றநண்பன் : செல்வம்
மருமகள் : றூபி

புனித பத்திரிசியார் கல்லூரி புதிய அனுமதி - 2019

2019ம் ஆண்டுக்கான தரம் 1, தரம் 6 வகுப்புக்களுக்கான புதிய அனுமதி விண்ணப்பப்ப படிவங்களை கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பி.ப.1.00 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா 700/= ஆகும்.

தரம் 1 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2013 இற்கும் 31.01.2014 இற்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.

தரம் 6 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2008 இல் அல்லது அதற்கு பின் பிறந்திருக்க வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளுதல் இறுதித் திகதி 03.08.2018. தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

புதிய அனுமதி தேர்வு 08.09.2018 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

2018 இல் 5 ஆம் வகுப்பு புலமைப்பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளை பெற்று சித்தியடையும் முதன்மை மாணவர் களுக்கு இலவச அனுமதியும், உயர்தர கற்கை நிறைவு பெறும் வரை இலவச கல்வியும் விசேட சலுகைகளும் வழங்கப்படும்.

மகிழ்ந்து பேருவகை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எத்தகையப் பண்புகள் புனிதத்துவத்தை எடுத்துரைக்கின்றன என்பதைக் கூறும் இப்பிரிவைத் தொடர்ந்து வரும் ஐந்தாவது பிரிவு தீயோனுக்கு எதிரான ஆன்மீகப் போராட்டம், விழித்திருத்தல், பகுத்துணர்தல் போன்றவை குறித்து விளக்கம் அளிக்கிறது.

புனிதத்துவத்தை தேடும் பாதையில் அன்னை மரியாவின் எடுத்துக்காட்டு மற்றும் உதவிகள் குறித்து 'மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்' என தன் திருத்தூது அறிவுரையின் நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார். திருத்தூது அறிவுரை, ஏப்ரல் 09, வெளியிடப்பட்டது.



யாழ் திருச்சபையில்
இசை மீட்டும் குருவீணைகளுள்
நாற்பது வருடம்
இறையிசை ஒலித்த
சகாயம் அடிகள்
சரித்திரம் பேசும்
சற்குருவானவர்
மறைமாவட்ட நிதி முகாமையாளர்
யாழ் மறைக்கோட்ட முதல்வர்
மறைக்கல்வி கல்வி நிலைய இயக்குநர்
இறையியல் விரிவுரையாளர் என
பன்முகப் பணி புரிந்த
பணிக்குருவே
வாழ்க... வாழ்கவே...
காலத்தில் நிலைத்து நின்று
காலத்தில் நிலைத்து நிற்கும்
அருட்பணிகள் பல புரிய
அருளாசிவேண்டி
வாழ்த்துகின்றோம் வழியவே....

மரியாயின் சேனை முல்லைத்தீவு கியூரியா கூட்டம்

முல்லைத்தீவு மறைக்கோட்ட மரியாயின் சேனை கியூரியாக்கூட்டம் 10.03. 2018 முள்ளியவளை புனித திரேசம்மா ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி நிக்சன் கொலின்ஸ் தலைமையில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மறைக்கோட்டத்தின் பல்வேறு பங்குகளில் 10 பிரசீடியாங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதன் அலுவலர்கள் இக் கியூரியாக் கூட்டத்தில் பங்குபற்றினார்கள். யாழ். மரியாயின் சேவை கொமிற்சிய இயக்குனர் அலுவலர்கள் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளருக்கான பயிற்சி

யாழ் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை சிறார் களுக்கான பேரணியும் அதனைத் தொடர்ந்து ஆயர் தலைமையில் திருப்பலியும் பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் எதிர்வரும் சித்திரை மாதம் 22ம் திகதி ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, முதற் பயிற்சிபெற்ற ஊக்குவிப்பாளர்களுக்குமான மூன்று நாள் வதிவிட பயிற்சியும் எதிர்வரும் சித்திரை மாதம் 20, 21, 22ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சியின் நிறைவில் அவர்களுக்கான சின்னம் சூட்டலும் ஆயர் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கொழும்பு தேசிய நிலைய இயக்குநர் அருட்பணி றொகான் பசில் பெர்னாண்டோ அடிகளார் பங்கேற்கவுள்ளார்.

போட்டி முடிவுகள்

யாழ் மறைமாவட்ட பொது நிலையினர் கழகத்தினால் நடாத்தப்பட்ட திறந்த பிரிவு கலைப்போட்டிகளாக இறைதிட்டம் தேடும் இளையோர் என்னும் கருப்பொருளில் வில்லிசை, கிராமிய நடனம் என்பன கடந்த 7ம் திகதி மறைக்கல்வி நடு நிலைய மண்டபத்தில் கழக இயக்குனர் அருட்பணி ஜே.ஜே.மவுலிஸ் அடிகள் தலைமையில் நடைபெற்றது. அதன் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

வில்லிசைப்போட்டி

முதலாமிடம் மணற்காடு புனித அந்தோனியார் ஆலயம்.
இரண்டாமிடம் குருநகர் புனித யாகப்பர் ஆலயம்
மூன்றாமிடம் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம்

கிராமிய நடனம்

முதலாமிடம் - குருநகர் புனித யாகப்பர் ஆலயம்.
இரண்டாமிடம் - மானிப்பாய் புனித அன்னாள் ஆலயம்
மூன்றாமிடம் - மணற்காடு புனித அந்தோனியார் ஆலயம்.
ஊக்குவிப்புப் பரிசினை குமுழமுனை புனித அந்தோனியார் ஆலயம் பெறுகின்றது.

முதலிடம் பெற்ற நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் 6ம் திகதி மேடையேற்றப்படவுள்ளதாக யாழ் மறை மாவட்ட பொதுநிலையினர் கழக செயலாளர் எஸ்.யேசுதாஸ் அறிவித்துள்ளார்.

பொது நிலையினர் கழக வருடாந்த மாநாடு

யாழ் மறைமாவட்ட பொது நிலையினர் கழக வருடாந்த மாநாடு எதிர்வரும் மே மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரன் ஞானப்பிரகாசம் ஆண்டகை சிறப்பு விருந்தினராக நீதிபதி அன்ரோ அமரவளன் ஆனந்த ராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம் மாநாட்டிற்கு யாழ் மறை மாவட்ட பங்குகளிலிருந்து 5 இற்கும் குறையாத பொது நிலை விழிப்புணர்வுக் குழுப் பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறு பங்குத்தந்தையர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திருப்பலி, கருத்துரைகள், பரிசளிப்பு, அறிக்கைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளதாக யாழ் மறை மாவட்ட பொது நிலையினர் கழக இயக்குனர் அருட்பணி ஜே.ஜே.மவுலிஸ் அடிகள் தெரிவித்துள்ளார்.

கொழும்பு உயர் மறை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து மெய்யியல் துறையில் பயின்று முதுமாணிப்பட்டம் பெற்றார்.

கண்டி தேசிய குருமடத்தில் பயிற்சியாளராகவும், நிதி பொறுப்பாளராகவும் பணியாற்றிய பின்னர் தேசிய குருமட மெய்யியல் பிரிவு நிர்வாகியாகவும் பணியாற்றினார்.

2005ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டு வரை தேசிய குருமட அதிபராகப் பணியாற்றிய இவர் 2011ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கொழும்பு உயர் மறைமாவட்ட குருத்துவ உருவாக்கம், மற்றும் தேவ அழைத்தல் ஊக்குவித்தல் போன்ற பணிகளுக்கு ஆயரின் பதிலாளராகவும் கொழும்பு புனித ஜோன் வியான்னி குருமட அதிபராகவும் கடமையாற்றி வந்துள்ளார்.

மாமூலை புனித அந்தோனியார் புதிய ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம்



மாமூலை புனித அந்தோனியார் புனித ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டுவைபவமானதுகடந்த13.02.2018செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றது. அதேநாளில் மாஞ்சோலை அற்புத குழந்தையேசு ஆலயத்திருநாட் திருப்பலியை தலைமையேற்று ஒப்புக்கொடுத்த யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் திருநாட் திருப்பலியைத் தொடர்ந்து புதுமைகளின் புனிதராம் மாமூலை புனித அந்தோனியார் புதிய ஆலயத்துக்கான அடிக்கல்லை ஆசீர்வதித்து நாட்டி வைத்து செபித்தார். தொடர்ந்தும் பங்குத்தந்தை அருட்பணி எம்.நிக்சன் கொலின் அடிகளாரின் அயராத முயற்சியைப் பாராட்டி அவரின் அரும்பணி தொடர வாழ்த்தினார்.

எல்லே தேர்தல் வலயத்தில் பற்றிக்ஸ் சம்பியன்

யாழ். வலய மட்ட எல்லே போட்டியில் 12, 13, ஆம் திகதிகளில் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டிகள் ஆண், பெண்கள் பிரிவுகளில் 19 வயதுக்கு உட்பட்ட யாழ் வலய பாடசாலைகள் பங்கு பற்றியது. இதில் ஆண்கள் பிரிவில் புனித பத்திரிசியார் கல்லூரி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.